என்று தணியும் எங்கள் சுதந்திர தாகம்

மகிழ்ச்சியான **13** ஆவது ஆண்டில்

June 2015

FREE ISSUE

# லண்டன் தமிழர் தகவல்

## London Tamil's Information



மாதாந்திர செய்திச் சஞ்சிகை

A monthly information digest



லண்டனில்
No1
நகை
மாளிகை
Lakshamis
Jewellers
தரமான தங்கத்துக்கு லண்டனில் நாடவேண்டிய ஒரே இடம்
லட்சுமி ஜுவலர்ஸ்
276 High Street North London E12 6SA UK
Tel : 020 8470 5600 Fax : 020 8470 3448
எங்களுக்கு வேறெங்கும் கிளைகள் இல்லை



Niru BRAND®
Bringing
Great
Food
to Life.
The No 1 Brand
Niru BRAND®
Quality you can taste
Niru Europe Ltd,Unit11,Mitcham Industrial Estate, 85 Streatham Road,Mitcham,Surrey CR42AP.
T: 020 8640 8228 F: 020 8640 8423 E:sales@niru.co.uk W: www.niru.co.uk



# தமிழர் தகவல்
## Tamil Information

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல் - குறள்


திருவள்ளுவர் ஆண்டு 2046

**வைகாசி**

மலர் : 13

இதழ் : 145

**ஜீன்** - 2015



முகவரி :
41, HADDINGTON ROAD
BROMLEY
KENT BR1 5RG, U.K.
Email : jothy5@yahoo.co.uk



வெளியீடு :
திருமுருகன் அறிவகம்
லண்டன்
Thirumurugan Arivagam
London

**கணக்கு எண் :** 29513668
**வங்கி இலக்கம் :** 77 91 29
**வங்கி :** Lloyds TSB

ஆசிரியர் : அரவிந்தன்
Editor : Aravindan

வடிவமைப்பு :
தமிழ்அலை
Layout :
Tamil Alai, tamilalai@gmail.com



படைப்புகள் யாவும்
ஆக்கியோரின் உரிமைகளே




4000 பிரதிகள்


தமிழர்களே! தமிழர்களுடன்
தமிழில் பேசுங்கள்!!


வாசகர்களே!
எமது விளம்பரதாரர்களை
மனமுவந்து ஆதரியுங்கள்!





மீண்டும்
புதுபொலிவுடன்
MITHUS
MITHUS Jewellers
322-324 London Road
Croydon CR0 2TJ
Tel : 020 8683 1756
Fax : 020 8683 1792




DOSA
LOUNGE
A Taste of Pure Spice Heaven
SRI LANKAN & SOUTH INDIAN RESTAURANT AND TAKE AWAY
ALL VEGETARIAN FOODS ARE COOKED SEPARATELY IN OUR VEGETARIAN KITCHEN AND SERVED ON SEPARATE PLATES
PARTY/ FUNCTION HALL AVAILABLE FOR HIRE. SMALL HALL UP TO 35 SEATS, BIG HALL UP TO 120 SEATS
FREE DELIVERY (6PM TO 10PM) WITHIN 3 MILES RADIUS. MINIMUM ORDER OF £20.00
OUTDOOR CATERING FOR PARTIES, FUNCTIONS ETC AVAILABLE
OPENING TIMES MONDAY – SUNDAY 11AM – 11PM
திங்கள் அன்று விடுமுறை
Tel: 020 8684 6661
5-7 St.James's Road, West Croydon, CR0 2SB
www.dosalounge.co.uk




Rathy Jewellers Ltd
எப்பொழுதும் நியாயமான விலை
புத்தம் புது டிசைன்கள்
Opening Hours
Mon-Sat 10 am to 6.30 pm
Sun 12 Noon to 6.30 pm
The Leading Jewellery Store in London with the Largest Selection including Diamond Jewellery, Thaali Kodi and all Studded Jewellery
WEMBLEY BRANCH
28 Ealing Road, Wembley
Middlesex HA0 4 TL, 020 8903 3063
TOOTING BRANCH
209 Upper Tooting Road
Tooting SW 17 7TG, 020 8682 2233
எங்களிடம் வரும் பழைய நகைகள் புதுப்பிக்கப்பட்ட பின்னர் தான் மீளத் தயாரிக்கப்படுகிறது அதனால் எல்லா நகைகளுக்கும் 22கரட் சரியாக இருக்கும்

# AMIRTAA

## ‘நல்ல சோறு’







## இப்பொழுது விற்பனையில்...

**இலங்கையில் உள்ள உறவுகளை வியப்பில் ஆழ்த்த மற்றும்**
**விரும்பும் உணவுகளை அன்பளிப்பாக இலங்கையில் உள்ள**
**இல்லங்களின் வாசல் சென்றடையும் துரித சேவை.**
**விரையுங்கள் www.orderfood.lk இணையதளத்துக்கு**




# www.orderfood.lk

**Order foods & gifts for your friends & loved ones in Sri Lanka**
**Order online at www.orderfood.lk**

## Order from as little as £10

**Get 10 % discount on your order.**




**Promotion code:UK150630 Offer valid until:30/06/2015**

- கொழும்பு
- மட்டக்களப்பு
- யாழ்பாணம்
- திருகோணமலை
- கிளிநொச்சி
- வவுனியா
- மன்னார்

*மேலும் விரைவில் பல இடங்கள்.*

Available on the App Store
ANDROID APP ON Google play

உங்கள் தேவை எங்கள் சேவை
UK +44 (0)207 118 0550
SL +94 114 444 111

info@orderfood.lk /orderfood /orderfoodlk




# ரிஷிகேஷ், ஹரித்துவார்

சென்ற அனுபவம்


பக்கம் 10ல்











# புண்ணிய காரியம்



முள்ளிவாய்க்காலில் மரணமடைந்த ஈழத்து உறவுகளுக்காக, கடந்த 18.05.2015, திங்கள்கிழமை அன்று, காசியில் ஆத்மசாந்தி கிரியைகள் நடத்தப்பட்டன. 'பிரித்தானியா சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம்' இப்புண்ணிய காரியத்தினை ஒருங்கிணைத்துச் செய்தது. இந்த ஒன்றியம் தோற்றுவிக்கப்பட்டு 16 ஆண்டுகள் ஆகின்றன. ஒவ்வோர் ஆண்டும், சைவ விழாவினை இவ் ஒன்றியம் சிறப்பாக நடத்தி வருகிறது. 2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் படுகொலை நடந்தேறிய சமயத்தில் நடக்கவிருந்த சைவ விழாவினைத் தள்ளிப் போடுங்கள் என்று அன்றைக்கிருந்த ஒன்றியத் தலைமையிடம் வேண்டுகோள் வைத்தேன். ஆனால் என் வேதனையின் வெளிப்பாடாக வைக்கப்பட்ட வேண்டுகோள் புறந்தள்ளப்பட்டு, அந்த ஆண்டும் அவ்விழா நடத்தப்பட்டது.

இன்றைக்கு ஆறு ஆண்டுகள் முடிவடைந்த நிலையில், சிங்கள இனவெறிக்குப் பலியான எம் மக்களின் ஆத்மா அமைதி பெறுவதற்கான காரியங்களைச் செய்ய வேண்டும் என்ற உன்னதமான சிந்தனை, ஒன்றியத்தின் புதிய தலைவராகக் கடந்தாண்டு பொறுப்பேற்றுக் கொண்ட திரு கோபால் அவர்களுக்கு வந்திருப்பது பெரிதும் பாராட்டத்தக்கது. ஈரோடு கூனம்பட்டி ஆதினத்தை அழைத்து வந்து, புண்ணிய பூமியான காசியில், கங்கைக் கரையில், 2009 மே காலகட்டத்தில் உயிரிழந்த அனைத்து மக்களின் ஆத்ம அமைதிக்காக, விசேசமான நீத்தார் வழிபாடும், கிரியைகளும், அன்னதானமும் முறைப்படி செய்யப்பட்டன.

ஈழ மக்களுக்கு ஆறுதல் அளிக்கக்கூடிய இந்நிகழ்வில், மட்டக்களப்பு எம்.பி., யோகேஸ்வரன், லண்டனில் இருந்து ரத்னராஜா (கயிலைமாமணி) தம்பதிகள் கலந்து கொண்டனர். இவர்களோடு அடியேனும் இப்புண்ணிய காரியத்தில் பங்குபெற்றேன்.

இறந்து போன உறவுகளின் முகங்களைக் கூடப் பார்க்க முடியாமல் எம் மக்கள் தவித்த தவிப்பும், சிந்திய கண்ணீரும் கொஞ்சமில்லை. இறுதிக் காரியங்களைக் கூடச் செய்ய முடியவில்லையே என்று ஏங்கித் தவித்த உள்ளங்களுக்கு, மிகப் பெரிய ஆறுதலையும், தேறுதலையும் கங்கைக் கரையில் தேடித் தந்திருக்கிறது பிரித்தானியா சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம் என்று சொன்னால் மிகையில்லை.

படுகளத்தில் உயிர்நீத்த அனைத்து ஈழமக்களின் ஆத்மாக்களும் கயிலைநாதனின் காலடியில் அமைதி பெறட்டும் என தமிழர் தகவலும் வேண்டுகிறது.

# புதிதாய்ப் பார்த்த புண்ணிய பூமிகள்

கடந்த மே மாதம் நடுப் பகுதியில் நானும், என் மனைவியும் காசிக்குச் சென்றோம். காசிக்கு எங்களின் ஆறாவது முறை பயணம் இது. முதல் பயணம் 1981இல் மேற்கொண்டோம். இங்கு நாம் தரிசிக்க வேண்டிய முதன்மையான கடவுள் காசி விசுவநாதர், அடுத்தாக காசி விசாலாட்சி, அன்னபூரணி. அன்றைக்குக் காசிவிசுவநாதர் கோயிலுக்குள் சென்று, விசுவநாதருக்குப் பாலாபிசேகம் செய்து, லிங்க வடிவிலான அவருடைய திருவுருவத்தைத் தொட்டு வணங்கினோம். இந்த முறை அப்படிச் செய்ய இயலவில்லை. காரணம், அன்றைக்கு இருந்ததைக் காட்டிலும், இன்று லிங்கம் தேய்ந்து தேய்ந்து சிறியதாகிவிட்டது.

அன்றைக்கு நாங்கள் பார்க்காத ஒரு நடைமுறையை இன்று பார்த்தோம். அது என்னவென்றால், மாலை 6 மணி அளவில், 12 பேர் கொண்ட அர்ச்சகர் குழு ஒன்று கங்கைக் கரைக்கு வந்து தீபம் ஏற்றி பூசை செய்வதை வழக்கமாக்கி இருக்கிறார்கள். கங்கையும் முன்பு போல் இல்லாமல், தூய்மையாக இருப்பதைப் பார்க்க முடிகிறது. என்றாலும், மக்கள் நெருக்கம் அப்படியேதான் உள்ளது.

பார்க்காத இடங்களைப் போய்ப் பார்த்துவிட்டு வாருங்கள் என்று எங்கள் பிள்ளைகள் அடிக்கடிச் சொல்வார்கள். அதை நினைவில் கொண்டு, இந்த முறை நாங்கள் இது வரை பார்த்திராத, ரிஷிகேஷ், ஹரித்துவார் சென்று வந்தோம். இங்கும் கங்கையோடு பயணிக்கும் அனுபவம் அருமையாக இருந்தது. காசியில் அமைதியாக ஓடும் கங்கை, இங்கு வேகமாக ஓடுகிறாள்.

ரிஷிகேசத்தில், கங்கையில் குளிப்பதற்கென்று குறிப்பிட்ட சில இடங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. ஆனால் காசியில் எந்தப் பகுதியில் வேண்டுமானால் கங்கையில் மூழ்கிக் குளிக்கலாம். ரிஷிகேசத்தில் சிவன் கோயிலுக்குச் சென்று தரிசித்தோம். இங்கு பரபரப்பூட்டும் படகு சவாரி செய்யலாம்.

ஹரிதுவாரில், மானசாதேவி, சண்டிதேவி என இரண்டு அம்மன் கோயில்கள் உள்ளன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு மலையின் உச்சியில் அமைந்துள்ளது. இரண்டு மலைகளுக்கும் இடையில் ரோப் கார் போக்குவரத்து செய்யப்பட்டுள்ளது. இதற்குப் வேறுபட்ட கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன. 490 ரூபாய் கொடுத்து டிக்கெட் வாங்கினால், இரண்டு மலை உச்சிக்கும் கொண்டு போய், சிறப்பு தரிசனம் செய்வித்து மீண்டும் கீழே வந்து விட்டுவிடுகின்றனர். அம்மனை தரிசிப்பதை விட, இரண்டு மலைகளுக்கு இடையிலான ரோப் கார் பயணமே அனைவரையும் ஈர்க்கிறது எனலாம். காசிவிசுவநாதர் தான் முழு முதற் கடவுள் எனும் போது, இவை போன்ற அம்மன் கோயில்கள் கூடுதல் தரிசனத்திற்கு மட்டுமே.

மேலும், வயதான பிறகு தான் இது போன்ற புண்ணிய தலங்களுக்குப் போக வேண்டும் என்று சிலர் கருதுகின்றனர். என்னைப் பொறுத்தவரை, நடுத்தர வயதிலேயே இது போன்ற புண்ணிய தலங்களைத் தரிசித்தால் தான், முதுமையில் உடல் நலமும், செல்வ வளமும் பெற்று மகிழ்வுடன் வாழ முடியும் என்பதை உறுதியாக நம்புகிறேன். என்னுடைய வாழ்க்கையும் அந்தப் படியே அமைந்துள்ளது என்பதையே சான்றாக வைக்கிறேன்.

ஒவ்வொரு பயணமும் ஒரு பாடத்தை நமக்குச் சொல்லும். இந்த காசிப் பயணம், என்றைக்கும் தன்னியல்பு மாறாமல் ஒரே மாதிரியாக ஓடிக் கொண்டிருக்கும் கங்கையைப் போல, மாறாத மனிதப் பண்புகளோடு இறுதி வரை வாழ்வதே நிறைவான வாழ்க்கை என்பதை உணர்த்தியது.

# 13ஆம் ஆண்டில் தமிழர் தகவல்

அன்பு உள்ளங்களுக்கு வணக்கம். உங்கள் கைகளில் தவழ்வது, தமிழர் தகவலின் 13ஆவது இதழ் என்பதை மகிழ்ச்சியோடும், பெருமிதத்தோடும் கூறிக்கொள்கிறேன். ஒரு பத்திரிகை நடத்துவது என்பது எந்தச் சூழலிலும் மிகுந்த சவால் நிறைந்த செயல் என்பதை நீங்கள் அறிவீர்கள். அதிலும் அகதியாக புலம்பெயர்ந்து வந்து அடைக்கலம் புகுந்த நாட்டில், இடையில் நிறுத்தாமல் தொடர்ச்சியாக 13ஆவது ஆண்டினைக் கொண்டாடுகிறது தகவல்.

பத்திரிகை என்பது கூட்டு முயற்சியின் விளைபொருள் என்பதை நான் நன்கறிவேன். தகவலின் வெற்றியைச் சாத்தியமாக்கிய பலருக்கும் இந்த நேரத்தில் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். முதலில், புலம்பெயர்ந்த தமிழனாக இருந்தபோதும், நான் தடையின்றி இயங்குவதற்கு சுதந்திரமானதொரு வெளியை அனுமதித்த இந்த லண்டன் மாநகருக்கு முதல் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். பத்திரிகை நடத்துவது நான் வரித்துக் கொண்ட வாழ்நாள் பணி என்பதை உணர்ந்து, எல்லா வகையிலும் எனக்கு ஒத்துழைப்பு அளித்துவரும் என் குடும்பத்தாருக்கு என் அன்பும், நன்றியும்.

காட்சி ஊடகமாக இருந்தாலும், அச்சு ஊடகமாக இருந்தாலும் விளம்பரங்கள் இன்றி அமையாது என்பதே உண்மை. அதிலும் முற்றிலும் இலவயமாகக் கொடுக்கப்படும் லண்டன் தமிழர் தகவல் இந்த இடத்தை அடைந்ததில் விளம்பரதாரர்களுக்கு மிக முக்கிய பங்கு இருக்கிறது. லாப நோக்கமின்றி நடத்தப்படும் தகவலின் - அதன் ஆசிரியரின் - பொதுநல நோக்கத்தை அறிந்து தொடர்ந்து விளம்பரம் வழங்கி ஆதரவு நல்கி வரும், லைக்கா மொபைல்ஸ் முகவர் திரு பிரேம், லட்சுமி ஜுவெல்லர்ஸ், ஐங்கரன் இன்டர்நேஷசனல், ஆர்.எம்.கே.வி - தமிழ்நாடு, நிரு, தரணி ஜுவெல்லர்ஸ், ஆர்டர் ஃபுட் இணையத்தளம், வாணி ஃபைன் ஆர்ட்ஸ், ஜே.கே. கோல்டு மற்றும் ஃபேஷன் ஹவுஸ், சோதிட சேவை, சாஷ்த்ரா கார்ட்ஸ், பிரைம் ஃபுட் மற்றும் ஒயின், உயர்வாசற்குன்று முருகன் கோயில், அமிர்தா 'நல்ல சோறு', பெஸ்ட் ஃபுட், பத்மினி ஜுவெல்லர்ஸ், கற்பகம் தமிழ்க்கடை, எவரஸ்ட் உணவகம், அந்தூரியம் ஜுவெல்லர்ஸ், மித்தூஸ் ஜுவெல்லர்ஸ், தோசா லவுன்ஞ், ரதி ஜுவெல்லர்ஸ், ஆதவன் டிவி, ஹோட்டல் வெஸ்டர்ன், ஸ்ரீ ஸ்டோர், செல்வராஜா கோல்டு ஹவுஸ் மற்றும் டெக்ஸ்டைல்ஸ், தினேஷ் ஜுவெல்லர்ஸ் மற்றும் டெக்ஸ்டைல்ஸ், வாணி ஃபுட்ஸ் - உள்ளிட்ட அனைத்து விளம்பரதாரர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றிகளை உரித்தாக்குகிறேன்.

எம்முடைய விளம்பரதாரர்களை ஆதரித்து ஊக்குவித்து வரும் தமிழர் தகவலின் நம்பிக்கை நட்சத்திரங்களான அன்பான வாசகர்களுக்குப் பெருமிதத்துடன் நன்றிகளைச் சொல்லிக் கொள்கிறேன். எல்லாவற்றிற்கும் மேலாக, தகவலின் செய்தித் தரத்தை மென்மேலும் சிறப்புடையதாக்கிக் கொண்டிருக்கும் பெருமதிப்பிற்குரிய கட்டுரையாளர்கள், எழுத்தாள நண்பர்கள் அனைவருக்கும் அன்பும், நன்றியும்.

இதே போன்று தங்களுடைய ஆதரவினைத் தொடர்ந்து வழங்கி, தமிழர் தகவல் சிறப்பாக வெளிவருவதற்கு துணை நிற்க வேண்டும் என்னும் வேண்டுகோளுடன்,

**சிவானந்த சோதி**

ஆசிரியர்

- நங்கை குமணன்



# எங்கே சமத்துவக் குரல்?

இன்றைய பொருளாதார வளர்ச்சிப் போக்குகளால் பெண்களின் வாழ்வில், சில புறத்தோற்ற மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. எனினும், பல்வேறு நிலைகளிலும் பெண் ஒடுக்கு முறையும், அதனால் ஏற்படும் துன்பமும், துயரமும் தொடரவே செய்கின்றன.

புதிய சமூக அமைப்பை உருவாக்கும் நோக்கத்துடன் போராடிக் கொண்டிருக்கும் விடுதலை அமைப்புகள் அனைத்தும் பெண் விடுதலையைத் தமது முதன்மை இலட்சியமாகக் கருதுகின்றன.

நமது நாட்டின் கிராமப்புறங்களில் விவசாய வேலைகளில் ஈடுபடும் பெண்கள், ஆண்கள் பெறும் கூலியில் அரைப்பங்கிலும் குறைவானதையே பெறுகின்றனர். நகர்ப் புறங்களில் தொழிற்சாலைகளிலும், வர்த்தக நிலையங்களிலும் குறைந்த சம்பளத்திற்கே பெண்கள் வேலைக்கு அமர்த்தப்படுகின்றனர்.

தேயிலைத் தோட்டங்களில் பணிபுரியும் பெண்கள் உயர்ந்த மலைகளில் மிகக் கடுமையாக உழைத்தும் குறைந்த சம்பளத்தையே பெறுகின்றனர். இளம் பெண்கள் தொழிற்சங்க உரிமைகள் எதுவுமின்றி கொடுக்கின்ற கூலியைப் பெற்று இரவு-பகலாக உழைக்கின்றனர்.

பணிபுரியச் செல்லும் பல பெண்கள்

தற்கொலை செய்து கொண்டுள்ளனர். அதற்குக் காரணம் அங்கு அவர்கள் அனுபவிக்கும் கொடுமைகளே ஆகும். பாலியல் வழியான பாகுபாடுகளம், வன்முறைகளும், இன மதக் கலவரங்களின் போதும் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பெருந்துயராகவே இருந்து வருகிறது.

இத்தகைய துயரிலிருந்து பெண்கள் விடுதலை பெற வேண்டும். இதற்குப் பெண்கள் அறிவியல் வழியாக விழிப்படைவதும், ஒன்றுபட்டுச் செயல்படுவதும் அவசியமாகும். பிற ஆடவனை நிமிர்ந்து நோக்காத அடக்கமும், கணவனுக்கு அஞ்சி, நாணி ஒடுங்கும் தன்மையும், எதிர்த்துப் பேசாத அடிமைத்தனமும் பெண்களின் பண்பாடாக படிப்படையாகப் பேணி வளர்க்கப்பட்டது. ஒருவனுக்கு ஒருத்தி என்று நாம் பெருமையுடன் பேசிக் கொள்ளும் பழைய பண்பாட்டு உறவு முறைகள் தனியுடைமை அமைப்பின் வெளிப்பாடாக உலகெங்கும் தோற்றம் பெற்றவை.

இயற்கை பாலியல் கவர்ச்சிக்காக பெண்களுக்கு அளித்த உடலழகு அன்றைய ஆளும் வர்க்கத்தினருக்குப் போதவில்லை. பொட்டிட்டு, மையிட்டு, பூச்சூடி, பட்டும், சருமையும் சுற்றி உடலெங்கும் ஆபரணங்கள் மாட்டி அழகு பார்த்து உடலழகைக் கூட்ட உண்டியைச் சுருக்கி, இடையை மெலிதாக்கி ஒட்டியாணமும் கால்களில் கொலுசும் மாட்டி வைத்து உணர்வற்றப் பாவைகளாகத் தமது மாளிகைகளில் கொலு வைத்தது.

முதலாளித்துவம் பெண்களை ஒடுக்குவதில் தனது பங்கை விட்டு வைக்கவில்லை. பாலியல் உணர்வுகளைத் தூண்டும் விளம்பரக் காட்சிப் பொருள்களாகவும், புத்தக அட்டைகள் முதல் திரைப்படங்கள் வரை நிர்வாணக் கோலங்களைக் காட்டிக் காசாக்கும் குறுக்கு வழிகளைக் கையாள்கிறது. கதாநாயகியை வில்லனிடமிருந்து காப்பாற்றும் வீரயுகக் காதலையும் தவறான பழைமைக் கருத்துகளையும் பெண்களிடம் மேன்மேலும் திணிக்கிறது.

தவறான பழைமைக் கருத்துகளில் இருந்து முற்றாக விடுபடாத நமது சமூகத்தில், பெண் விடுதலைக்கு எதிரான கருத்துடையவர்களும் இருக்கின்றனர். உயிரியல், உளவியல்,





உடற்கூற்றுக் காரணங்கள் எதனைக் கூறினாலும், இரத்தமும், சதையும், உடலும் உயிரும் உணர்வும் கொண்ட ஒரு மானிட உயிர் என்ற வகையில் பெண் சுதந்திரமானவள். ஒடுக்கப்படும் பெண்களுக்கு ஒடுக்குதலுக்கு எதிராகப் போராடும் உரிமை உண்டு. பெண்கள் தமது விடுதலைக்குத் தாமே போராட வேண்டும்.

நாம் வாழும் சமூகத்தில் பெண் ஒடுக்குமுறை போன்று பல்வேறு ஒடுக்குமுறைகள் நிலவுகின்றன. ஒரு சமூகத்தின் பொருளாதார அமைப்பு, கல்வி, கலை, கலாச்சாரம், மத நம்பிக்கைகள் அனைத்தையும் கட்டுப்படுத்தி இயங்குகின்ற அதிகார நிறுவன அரசாகும். அந்த வகையில் அதன் கீழ் உள்ள அனைத்து அடக்கு முறைகளுக்கும் அரசே காரணமாகிறது. முதலாளித்துவ அரசுகள் எங்கும் வசதி படைத்த ஒரு சாராரின் நலன்களைப் பேணுவதையே நோக்கமாகக் கொண்டுள்ளன.

பெண் விடுதலைக்கான குரல்கள் எழுப்பியது ரஷ்யப்புரட்சி, சீனப்புரட்சி, இந்திய சுதந்திரப் போராட்டம், கியூபா புரட்சி, கொரியா, வியட்நாம் மற்றும் தென் அமெரிக்கா விடுதலைப் போராட்டங்கள் போன்ற அனைத்திலும் இக்குரல்கள் எழுந்தன.

பாரதியின் பெண் விடுதலைக்கான அறைகூவல் என்பது தமிழர்கள் மத்தியில் மட்டுமல்ல, இந்தியாவெங்கும் ஒலித்தது. ஆனால், பெண் விடுதலையை உறுதியான கொள்கையாக ஏற்காத இந்தியா போன்ற நாடுகளில் வெறும் போர்க்கால சமத்துவக் குரலாக நலிந்து ஒடுங்கியுள்ளது. போர் என்பது ஆயுதத்தை மட்டுமின்றி மனிதவளத் தேவையையும் அடிப்படையாகக் கொண்டது.

இந்த வகையில் மக்கள் தொகையில் பாதிப்பேர் களான பெண்களும், ஆயுதம் ஏந்துவது வரலாற்றில் புதியதல்ல.

பெண்கள் படைக்கலம் (ஆயுதம்) ஏந்திப் போர் முனைகளில் நிற்பதோடு மட்டும் நின்றுவிடாமல் பெண் விடுதலையை ஓர் உறுதியான கொள்கையாக ஏற்றுச் செயல்படுத்துவதன் மூலமே ஒரு புதிய சமூக மாறுதலை ஏற்படுத்த முடியும்.

# வித்யாசாகர் கவிதைகள்



1

எல்லோரிடமும்
போய் வருகிறேன்
போய் வருகிறேன்
என்றேன்
உன்னிடமும் சொன்னேன்
நீ போ என்கிறாய்
கண்கள் போகாதே என்கிறது,
நானும் போகிறேன் என்கிறேன்
மனசு உன்னோடே நிற்கிறது..
வேறென்ன செய்ய
ஒரு கணத்தில் எப்படியோ
அங்கிருந்து வந்துவிடுகிறேன்
உன்னிடமிருந்து மனசு வந்ததேயில்லை..

2

உனக்குத் தூக்கத்தில்
வரும் கனவும்
எனக்கு வரும் கனவும்
ஒன்று தான்;
நீ எனக்குச் சொல்லாததும்
நானுனக்குச் சொல்லாததும் அது..

3

கைக்குட்டையை கொடுத்து
மடித்து வைத்துக் கொள்
என்றாய்..
எனக்குத் தெரியும்
நீ எதையோ கொடுக்கிறாய்
எதையோ என்னுள் புதைக்கிறாய்
அதை நான்
பத்திரமாக வைத்திருப்பேன்
ஒரு முறை மறுமுறை என்று
சிமிட்டிக் கொள்ளும் இமைகளுள்
நீ கொடுத்த கைக்குட்டையும்
அதோடு மடிந்துக் கிடக்கும் நீயும்
மிக பத்திரமாகயிருக்கும்..

4

உனக்குத் தெரியுமா
எனக்கு
இப்போதெல்லாம்
போதை நிறைய ஏறிக் கிடக்கிறது
வெறும்
நீயெனும் போதை..

# சுயம்

## - தாமரைச்செல்வி

மயக்கத்திற்கும், விழிப்புக்குமாக மனம் ஊசலாடிக் கொண்டிருக்கிறது. பகலா இரவா என்று கூட சிலவேளைகளில் தெரிவதில்லை. தனக்கு என்ன நேர்ந்தது என்றே அவருக்குச் சரியாகப் புரியவில்லை.

ஒடுங்கிப் போன உருவம்... குச்சி குச்சியாய் மெலிந்து போன கை கால்கள்... வெளுத்துப் போன முகத்தின் தோல் எலும்போடு ஒட்டியிருக்க கண்கள் குழிக்குள் புதைந்திருந்தது. ஒரு மிரட்சியோடு உருளும் கண்மணிகள்...

படுக்கையில் படுத்திருப்பது ஒன்றும் அவ்வளவு சுகமானதாக தெரியவில்லை. பின் கழுத்தில் ஒருவித வலி நிரந்தரமாய் படிந்து விட்டிருந்தது. இப்போது இரண்டு வாரமாய் இதே படுக்கைதான். இதே வேதனை தான்.

அக்கராயன் ஆஸ்பத்திரியில் படுத்திருந்த போது வைத்தியர் சொன்ன வார்த்தைகள் லேசாய் நினைவில் வந்து வந்து போனது.

"அடுத்தடுத்து காய்ச்சல் வந்ததால் உடம்பு தளர்ந்திட்டுது. எழுபத்தெட்டு வயதாச்சல்லே... உடம்புக்கு நோயை எதிர்க்கின்ற சக்தி இல்லாமல் போயிட்டது. இனி ஏலாது, வீட்ட கொண்டு போய் வைச்சுப் பாருங்கோ... இனி கடைசி நேரம்... என்று சாடை மாடையாக சொன்னார்.

அந்த வார்த்தைகள் மூளையில் பதிந்த வேளையில் மனதில் ஏற்பட்ட பதறல்.... இந்தப் படுக்கை நிரந்தரமாகி விடுமோ என்ற திகில்.... எல்லாமாக மனதைச் சூழ்ந்து கொண்டதே.... அந்த வினாடி கூட லேசாய் நினைவில் நிற்கிறது. இனி இயலாது என்றதும் கார் பிடித்து வன்னேரிக்குளத்துக்கு கூட்டி வந்துவிட்டார்கள்.

அய்யோ..... என்னை வவுனியாவுக்கு கொண்டு போங்கோ.... கொழும்புக்கு கொண்டு போங்கோ.... என்று அவர்



உள்மனம் அலறியது வெளியே ஒருவருக்கும் கேட்கவில்லை.

முடிவு விரைவிலேயே வரப்போகிறது என்று வீட்டாட்கள் தீர்மானித்திருக்க வேண்டும். வீட்டில் கொண்டு வந்து படுக்க வைத்து விட்டார்கள்.

முடிவு விரைவிலேயே வரப்போகிறது என்று வீட்டாட்கள் தீர்மானித்திருக்க வேண்டும். வீட்டில் கொண்டு வந்து படுக்க வைத்து விட்டார்கள்.

முதுகுக்குக் கீழே கட்டில் பலகை அழுத்தாமல் இருக்க பவழத்தின் பழைய சேலை பரவியிருந்தது. கண் விழித்துப் பார்க்கும் நேரம் எதிரே கானல் பறக்க பரந்திருந்த வெளிகள்... தெருவின் செம்மண்ணின் புழுதியைக் கிளப்பிக் கொண்டு வாகனங்கள் போகும்போது காற்றில் படரும் தூசு... அதன் நெடி வெம்மையுடன் வந்து முகத்தைத் தாக்கும். வீடு வாசல் விட்டு ஓடி வந்து அவசர அவசரமாக போட்ட கொட்டில் வீடு, சிறு விறாந்தை, அந்த விறாந்தை ஓரம் அவரது படுக்கை...!

வீடா இது....? அவருடைய வீடு இப்படியா இருக்கும்...? நான்கு அறைகளுடன் முன் விறாந்தை, பின் விறாந்தை போட்டுக் கட்டிய அவரின் வீடு பரந்தனில் இருக்கிறது. சந்திக்குப் பக்கத்தில் கண்டிவீதியில் தென்னஞ்சோலை நடுவே இருக்கும் வீடு. ஆனையிறவில் இருந்து அடிக்கும் "ஷெல்" நாலு மைல் தள்ளி இருந்த அவர் ஊர் மீது எத்தனை தடவைகள் வந்து விழுந்திருக்கிறது.

கடைசியாய் தாங்க முடியாமல் தானே அத்தனையும் விட்டு இந்த வன்னேரிக்குளம் வரை ஓடிவர நேர்ந்தது. போதாததற்கு இடம் பெயர்ந்து வந்த சனங்களின் நெரிசல் வேறு. இது காடுகள் சூழ்ந்த இடம், இயல்பாகவே காற்றில் வெம்மை இருந்தது. அவருக்கு ஒன்றுமே ஒத்துவரவில்லை.

ஊரில் வயல் செய்ததால் நன்றாய் வசதியுடன் இருக்க முடிந்தது. ஆனால் எல்லா வசதிகளும் எண்பத்தி ஐந்தாம் ஆண்டு வரைதான். அதற்குப் பிறகு மாறி மாறி பிரச்சினைகள். ஷெல் அடி.... பொம்பர்களின் குண்டு வீச்சு... ராணுவ நகர்வு... என்று மாறி மாறி ஊர்மக்களை அலைக்கழிக்க வைத்தது. அதுவும் தொண்ணூறுக்குப் பிறகு வயல் விதைக்க முடியாமல் போய்விட்டது. பொருளாதாரத் தடையால் பசளை மருந்து வரவில்லை. அப்போதிருந்தே கையில் காசு வரளத் தொடங்கி விட்டது.

ஆனாலும் அவருக்கு அந்த நாட்களில் இருந்த திமிரும், ஆணவமும் மட்டும் இப்போதும் குறையாமல் தான் இருந்தது. படுத்த படுக்கையாய் கிடக்கின்ற இந்த நாட்களில் விட்டு விட்டு நினைவு வரும் வேளைகளில் மனம் எதை எதையோ நினைத்துக் கொள்கிறது. முந்தாநாளிலிருந்து விசேடமாய் வைத்தியர் வந்து ஊசி போடுகிறார். அதனால் இரண்டு நாளாய் சுயநினைவு அதிகமாய் வருகிறது.

நினைவு வரும் வேளைகளில் கண்களை உருட்டி சுற்றிலும் பார்த்துக் கொண்டிருப்பார்.

விறாந்தையின் மறுபக்கம் அமைக்கப்பட்டிருந்த குசினிக்குள் பவழம் இருந்து ஏதாவது செய்து கொண்டிருப்பாள். அவளைப் பார்த்ததும் மனதின் மூலையில் கருக்கென்று வலிக்கும்.

இன்று நரைமயிர் நிறைந்திருக்க... முகத்தில் சுருக்கங்களுடன் மெலிந்து சருகாகிப் போய் இருக்கும் இவளை அந்த நாட்களில் போய் அவரைப் பார்க்கும் பார்வை...

அதை ஒரு திருப்தியோடு பார்க்கும் மனவக்கிரம் அவருக்கும் இருந்திருக்கிறது. திமிரும் ஆங்காரமும் அவருக்கு இயல்பாய் அமைந்து விட்ட குணங்கள். இந்தக் குணத்தால் இவளை மட்டுமல்ல எல்லோரையும் தான் வதைத்திருக்கிறார். பெற்ற பிள்ளைகளிடம் கூட ஆதரவாய் நடந்ததில்லை.

இன்றைக்கு அவருக்காக வைத்தியரை வீட்டுக்கே கூட்டி வந்து பார்க்கச் செய்கின்ற மூத்தமகனை எத்தனை நாட்கள் வருத்தியிருப்பார். இருபது வயது வரை கூட அவனுக்கு அடித்திருக்கிறார். வார்த்தைகளினால் எரித்திருக்கிறார். உழைப்பு இருந்த தெம்பு... கையில் நாலு காசு இருந்த

திமிர். யாரையும் மதித்ததில்லை.....

பேரப்பிள்ளைகளுடன் கூட ஒரு நாள் இருந்து அன்பாய் பழகியதில்லை.

அவர்கள் அவரைப் பார்க்கும் பார்வையில் நிரந்தரப் பயம் குடியிருக்கும். யாரும் எதிர்வார்த்தை சொல்லாத நிலை. இதுதான் அவருக்கு சந்தோசமான விசயமாய் இருந்திருக்கிறது. சுகமாய் இருந்த காலத்தில் எல்லாம் எல்லாரையும் அதட்டி உருட்டி அதிகாரம் செய்து கொண்டிருந்தவருக்கு இப்போது தன் பலம் எல்லாம் இழந்த நிலை... நோயோடு போராடி கடைசியில் மரணவிளிம்பு வரை வந்து விட்ட உணர்வு.... இந்த அந்திம வயதில் படுத்த படுக்கையில் இருக்கும்போது தான் தன்னைப் புரட்டிப் பார்க்க அவரால் முடிகிறது.

நான் ஏன் அப்படி இருந்தேன்.....?

வீட்டாருக்கு மட்டும் அல்ல ஊராருக்கும் கூட நல்லவனாய் இருக்காமல் ஏன் அந்த மாதிரி வாழ்ந்தேன்....

"அந்நாள் ஒரு போக்கு, ஒருத்தரோடையும் ஒத்துப் போகாத சுடுதண்ணி மனிசன்....." என்று ஏன் எல்லோரையும் சொல்ல வைத்தேன்.

அடிமனது இப்போது தான் தத்தளிக்கிறது.... இந்த தவிப்புக்கு சொந்த வீடு வாசல் விட்டு வந்த கையறு நிலை காரணமா? அல்லது உடம்பு முழுக்க சுண்டியிழுக்கும் வலி, வாழ்வின் கடைசி நாட்களை நினைவு படுத்துவது தான் காரணமா?

அவருக்கு ஒன்றும் விளங்கவில்லை. எதையும் தொடராய் யோசிக்க முடியவில்லை.

இந்த மாதிரி படுக்கையில் வைத்து இவர்கள் ஆதரவாய்ப் பார்க்கும் போது மனச்சாட்சி உறுத்தியது.

மூத்தமகன் அவரை மெதுவாய் தூக்கி வைத்திருக்க பவழம் ஹோர்லிக்ஸை வாயில் வைத்து குடிக்கச் செய்யும் போது தன்னிச்சையாய் கண்கள் பொங்கும்.

அந்தப் பாடுபடுத்தியும் இவர்கள் தன்னை இந்த மாதிரி பார்த்துக் கொள்கிறார்களே என்ற இரக்கத்தில் ஏதாவது நாலு வார்த்தை சொல்ல வேண்டும் போல இருக்கும். வார்த்தைகள் வராது. சொல்ல நா ஒத்துழைக்காது. தொண்டை நரம்பு எங்கேயோ இழுத்துக் கொண்டு விடும். விண் விண் என்று உடம்பு முழுக்க வலிக்கும்.

அய்யோ... என்று மனம் பதை பதைப்பதை பகிர்ந்து கொள்ள முடியவில்லை. குடியுங்கோப்பா.... இன்னும் கொஞ்சம் தான்... இன்னம் கொஞ்சம் தான்.... என்று குழந்தைக்கு சொல்வது போல சொல்லிச் சொல்லி குடிக்க வைப்பாள்.

அவர் பார்வை நெருக்கமாய் தெரியும் அவள் முகத்திலேயே பதிந்திருக்கும். இப்போதெல்லாம் அவளின் கண்களில் பரிதாபமும் பரிவும் மட்டுமே பிரதிபலிக்கிறது. பயம் மறைந்து விட்டது.

சுடுசோற்றைத் தந்துவிட்டாள் என்று கோப்பையோடு அவள் தலையில் கொட்டியிருந்த சம்பவங்கள் நினைவுக்கு வந்தன. திமிறி வந்த கோபத்தை அடக்க முடியாமல் அவளது தலைமயிரைப் பிடித்திழுத்து சுவரில் மோதிய நேரங்கள் நினைவுக்கு வந்தன.

இனிமேல் இந்த நோயிலிருந்து மீண்டு எழமுடியாது என்ற நினைப்பு மனம் முழுவதையும் அக்கிரமித்துக் கொண்டதால் தான் மனம் இப்படித் தத்தளிக்கிறதோ.... மரணபயம் தந்த கலவரம் தான் சுய இயல்புகளை இப்படி ஆராய வைக்கிறதோ....

நினைவின் ஆழத்திலிருந்து வலுக்கட்டாயமாக இழுத்துப் பிடித்துப் பார்க்க எத்தனை சம்பவங்கள்.... எத்தனை நிகழ்வுகள்....

காலை எழுந்த உடனேயே அவருக்குத் தேனீர் குடிக்க வேண்டும். நிலம் விடிகிற நேரம். நாவரண்டு தொண்டை காய்ந்து விடும். சுடச்சுட தேனீர் குடிக்க வேண்டும் என்ற உணர்வு... அது பழகி விட்டது.

அவரின் குணம் அறிந்து விடியற்காலையிலேயே தேனீர் போட்டுக்

கொடுத்து விடுவாள். எப்போதாவது சில வேலைகளில் தேனீர் கொடுக்கப் பிந்தினால்.... "விடிஞ்சு இவ்வளவு நேரமாச்சு.... ஒரு தேத்தண்ணி போட்டுத் தராமல் எங்கையடி துலைஞ்சு போனனி....?" என்று சுள்ளென்று பாய்வார்.

அத்தனை ஏச்சுப் பேச்சுகளையும் கூட எல்லாவற்றையும் மறந்து தான் விட்டார்களா? இவர்களுக்கெல்லாம் எத்தனை அநியாயங்கள் செய்திருக்கிறேன். அப்படியிருந்தும் அந்தப்பாடு படுத்திய கிழவன் படுக்கையிலேயே கிடந்து நல்லாய் அனுபவிக்கட்டும், கிழடுக்கு இது காணாது என்று ஏன் யாருமே நினைக்கவில்லை.... என்று மனம் கிடந்து குமைகிறது. அப்படிப் பேசினாலாவது நிம்மதியாய் இருக்கும் போலும்,

இடம் பெயர்ந்து வந்த பிறகு இந்த ஒன்றரை வருடங்களில் வீடு படும் கஷ்டங்களை அவரும் பார்த்துக் கொண்டு தான் வருகிறார். உழைப்பு இல்லை, வருமானம் இல்லை. மூத்தவனும் இளையவனுமாய் தெருக்கரையில் போட்ட சிறுகடை மூலம் வரும் வருமானத்தையே முழுக் குடும்பமும் பகிர்ந்து கொள்ள வேண்டியிருக்கிறது.

இப்போது பவழத்தின் கழுத்திலிருந்த மூன்று பவுண் சங்கிலியையும் மூத்தவனின் கைமோதிரத்தையும் காணவில்லை. எல்லா விதத்திலும் சிக்கனமாக குடும்பம் நடத்த வேண்டிய நெருக்கடியான நிலை. இதை எப்படி பவழம் சமாளிக்கிறாள் என்று அவர் ஒரு போதும் நினைத்துப் பார்த்ததில்லை.

அவர் முற்றத்து வேப்பமரத்தின் கீழ் அமர்ந்து கொண்டு வழக்கம் போல எல்லோரையும் அதிகாரம் செய்து கொண்டு தான் இருந்தார். இரண்டு காணி தள்ளிப்போய் தண்ணீர் அள்ளி வந்து பரலுக்குள் நிரப்பி வைத்தால் தான் அவர் குளித்துக் கொள்வார்.

தன்னுடைய வசதிகள் எதுவும் குறையாமல் தான் கூடிய வரை பார்த்துக் கொள்வார். ஆனாலும் இந்த ஒன்றரை வருடங்களிலும் அடிக்கடி காய்ச்சல் வரத் தொடங்கியது. மனிதர்களை மிரட்டுவது போல நோயை மிரட்ட முடிவதில்லையே?

மலேரியா, மூளைமலேரியா, நெருப்புக்காய்ச்சல், குளிர்காய்ச்சல், சளிக்காய்ச்சல் என்று ஒவ்வொரு தடவையும் ரத்தம் சோதிக்கின்ற போது விதம் விதமாய்ப் பெயர் சொன்னார்கள். காய்ச்சலில் இத்தனை விதம் இருக்கும் என்று சத்தியமாய் அவருக்கு இதுவரை தெரியாது.

எல்லாக் காய்ச்சலும் மாறி மாறி வந்து அவரை ஒரு உலுப்பு உலுப்பி விட்டது. இப்போது படுக்கையிலும் கிடத்திவிட்டது.

வீட்டில் என்ன கஷ்டம் இருந்தாலும் அவருக்குத் தேவையான மருந்து எடுத்து நன்றாய்த் தான் பார்த்துக் கொண்டார்கள். படுக்கையில் படுத்த இந்த இரண்டு வாரத்தில் நாலு நாளைக்கு ஒரு தடவை ஒரு வைத்தியரை வீட்டுக்கே கூட்டிவந்து காட்டினார்கள். நாலு நாளுக்கு முதல் வந்து பார்த்த வைத்தியர் மூத்தவனிடம் சொன்னார்.

"ஒரு ஊசி மருந்து இருக்கு தம்பி, நாலு நாளுக்கு தொடர்ந்து போட்டால் சுகம் தெரியும். ஓரளவு தெம்பாய் எழும்புவார். கொஞ்சம் விலை கூடத்தான். நீங்கள் வாங்கித் தந்தால் நான் போட்டு விடுறன்".

வைத்தியரின் வார்த்தைகள் அவருக்கும் மெலிதாய் கேட்டது. "பேரை எழுதித்தாங்கோ. வாங்கி வ்நது தாறன். போட்டு விடுங்கோ" மூத்தவன் ஜெயபுரம்... ஸ்கந்தபுரம் என்று ஓடித்திரிந்து அங்கு இல்லாமல் பிறகு மல்லாவிக்குப் போய் ஊசி மருந்தை வாங்கி வந்தான். காசுக்கு எங்கே அலைந்தானோ தெரியவில்லை. காசைப் பற்றி யாரும் கதைக்கவில்லை.

வைத்தியர் மூன்று நாளாய் வந்து ஒவ்வொரு ஊசியாய் போட்டு விட்டார். இன்றைக்கு கடைசி ஊசி போட வருவார். மூன்று ஊசி போட்டதிலேயே சிறிது தெளிவு இருக்கிறது. தொடராய் யோசிக்க முடிகிறது. ஞாபக சக்தி திரும்பியிருக்கிறது. பின் கழுத்து வலி நன்றாய்க் குறைந்திருக்கிறது.

இப்படி எதற்கும் இயலாமல் படுத்திருப்பது

பெரிய கொடுமையாக இருக்கிறது. மத்தியான வெய்யில் நேரத்தில் உடம்பு நெருப்பாய் எரிகிறது.

"வாணி அப்புக்கு வேர்க்குது... விசிறி விடுங்கோம்மா...." என்று மூத்த மருமகள் சொல்ல அவரின் பேத்தி எட்டு வயது வாணி சிறிது நெருங்கி வந்து ஓலை விசிறியால் விசிறி விடுகிறாள்.

அந்தக் குழந்தையின் முகத்தில் அவர் பற்றிய பரிதாபம் இருக்கும். அந்த முகபாவமே அவர் மனதை தீயாய் சுடும். சுருங்கிய கண்களை நிரப்பிக் கொண்டு கண்ணீர் தழும்பும்.

இது வேதனை...

இதுதான் வேதனை....

இப்போது இந்த ஊசி மருந்து போடுவதினால் தான் உணர்வு ஓரள வேனும் தொடராய் இருக்கிறது. நாளைக்கு கதைக்கக்கூட முடியலாம்.

இவர்களைப்படுத்திய பாட்டிற்கு மனம் வருந்துவதை இவர்களுக்கு சொல்ல வேண்டும். இவர்களோடு நாலு வார்த்தை அன்பாகக் கதைக்க வேண்டும். பவழத்தின் தலையை ஆதரவாய் தடவி விட என் கைகளுக்கு சக்தி வரவேண்டும். எழுபத்தெட்டு வயதிலாவது நல்லவனாய் மற்றவர்களால் நினைக்கப்பட வேண்டும். அதற்குள் நான் செத்துப் போய் விடக்கூடாது. ஒரு பொல்லாதவனாய் வாழ்ந்த வாழ்க்கை மிஞ்சிவிடக்கூடாது.

மரணத்தின் வாசலில் ஆங்காரமெல்லாம் அடிபட்டுப் போக மனம் நொந்து திருந்தியதை இவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். நான் செத்த பிறகு என்னைப் பற்றிய நல்ல நினைவுகளை இவர்கள் சுமக்க வேண்டும். அதற்கு ஒரு சந்தர்ப்பத்தை மனம் இரங்கி கடவுள் தரவேண்டும். இல்லாவிட்டால் நெஞ்சு வேகாது.... ஆவி நிம்மதி அடையாது. கடவுளே... கடவுளே...

கண்களிலிருந்து நீர் வழிவதை அவரால் உணரமுடிந்தது. மாலையில் வெய்யில் நன்றாய் தாழ்ந்த நேர்த்தில் வைத்தியர் வந்தார். ஊசி போட்டார். நாடி பிடித்துப் பார்த்தார்.

"முன்னேற்றம் தெரியுது. குளிசை விழுங்க மாட்டார் தானே. இந்த குளிசையளை கரைச்சு குடுங்கோ. ரெண்டு நாளில வந்து பார்க்கிறன்."

அவர் போனபிறகு இளையவனும் பேரனுமாய் ஈரத்துணியால் முகம் உடம்பு எல்லாம் துடைத்து விட்டார்கள். லேசாய் பவுடர் போட்டு உடுப்பு மாற்றி விட்டார்கள்.

இரவு மனமும் உடம்பும் லேசாய் இருந்தது. மெலிதாய் காற்றுக் கூட வீசியது. மூச்சு சீராய் வந்தது. நரம்புவலி இருக்கவில்லை. நீண்ட நாட்களுக்குப் பிறகு இந்த சுகம் தெரிந்தது. ஏதோ காற்றில் மிதப்பது போல.... ஆழ்ந்த நித்திரையா..... அல்லது மயக்கமா... திடீரென்று மனதில் ஒரு வித பயம் எழுந்தது. எங்கேயோ ஆழமாய் இழுபட்டுக் கொண்டு



குறைந்திருக்கிறது. கையை லேசாய் அசைக்க முடிகிறது. அம்மாடி..... இனி சுகமாகி விடும்... நாலு நாளில் எழும்பி நடக்கலாம். நினைத்த இடம் போய் வரலாம். ஊசி மருந்து வேலை செய்திருக்கிறது. தலையை அசைத்து கண்களை மெல்ல திறந்த போது எதிரே பரந்த வானம் தெரிந்தது.

மெல்லிய விடியலில் இருளும் ஒளியுமாய் கலந்திருந்த வானம்..... ஒரு புதிய விடிகாலைப் பொழுது.... அய்யோ நான் சாகவில்லை....

மனதுக்குள் பரபரப்பு.... கண்களை வெட்டிப் பார்த்தார். உயிர் இருக்கிறது.... உணர்வு இருக்கிறது....

இடது கையை கொஞ்சம் ஊன்றி எழும்ப முயற்சித்தார்.

உடம்பு காற்றுப் போல ஒத்துழைத்தது. மெதுவாய் சரிந்து எழும்பி சுற்றிலும் பார்த்தார்.

விறாந்தையில் மூத்தவனும் பேரப்பிள்ளைகளும் படுத்திருந்தார்கள். வீடே அமைதியாக இருந்தது.

சுகம் வந்திட்டுது....

அதிகாலைக் காற்று சிறிது குளிர்மையுடன் முகத்தை வந்து தடவியது. பவழத்தை பார்வையால் தேடினார்.

குசினிக்குள் தண்ணீர் வாளியுடன் பவழம் நுழைவது தெரிந்தது. நா வரண்டு தொண்டை காய்ந்த உணர்வு.

ஆழமாய் கிடந்த ஏதோ ஒன்று திமிறிக் கொண்டு எழுந்தது.

"விடிஞ்சு இவ்வளவு நேரமாச்சு. ஒரு தேத்தண்ணி போட்டுத்தராமல் எங்கையடி துலைஞ்சு போனனி...."

அவரது கீச்சென்ற கத்தலில் பவழம் பதறியடித்துக் கொண்டு ஓடிவந்தாள். அவள் கண்களில் பயம் அப்பிக் கிடந்ததைப் பார்த்தபடியே

"கொண்டு வாவனடி கெதியாய்...." என்றார்.

# வளையாபதியில் உலாவும் மகளிர்



- கா.விசயரத்தினம்

வளையாபதி ஐம்பெருங்காப்பியங்களில் நாலாவது நூலாகும். அது கி.பி. ஏழாம் நூற்றாண்டில் எழுந்தது. நூலாசிரியரின் பெயர் தெரியவில்லை. இந்நூல் சமண சமயம் சார்ந்தது. அதன் கதாநாயகன் நவகோட்டி நாராயணன் என்பவன் ஆவா தமிழ் அன்னையின் வளையல்களாக அவள் கைகளில் இந்நூல் திகழ்கின்றது. நூலின் கதாநாயகி பெயர் தெரியவில்லை. வளையாபதி நூல் முழுவதும் கிடைக்கவில்லை.




ஆனால் இக்காப்பியத்தின் 72 பாடல்கள் மட்டுமே கிடைக்கப் பெற்றுள்ளன. அவற்றில் 66 பாடல்கள் 14ஆம் நூற்றாண்டில் தோன்றிய புறத்திரட்டில் மேற்கோளாகவும், 3 பாடல்கள் சிலம்பின் அடியார்க்கு நல்லார் உரையில் மேற்கோளாகவும், 2 பாடல்கள்; யாப்பருங்கலக்காரிகை என்னும் இலக்கண நூலின் பெயர் தெரியாத ஓர் அறிஞரால் இயற்றப்பட்ட விருத்தியுரையில் மேற்கோளாகவும், எஞ்சிய ஒரு பாடல் இளம் பூரணரின் தொல்காப்பிய உரையிலும், யாப்பருங்கலக்காரிகை விருத்தியுரையிலும், நச்சினார்க்கினியரின் தொல்காப்பியம் செய்யுளியலிலும் மேற்கோளாகவும் காட்டப்பட்டுள்ளன. தற்பொழுது வளையாபதிக் காப்பியம் கதை வடிவில் மாத்திரம் தான் உள்ளது. இனி வளையாபதியின் கதைச் சுருக்கத்தையும், அதில் வரும் மகளிர் பற்றியும் பார்ப்போம்.

புகார் நகரில் நவகோடி நாராயணன் என்னும் ஒரு சிறந்த வணிகன் இருந்தான். அவன் சைவ சமயத்தவன். தன் குலத்தைச் சார்ந்த ஒரு பெண்ணை மணந்து இன்பகரமான இல்வாழ்க்கை நடத்தி வாழ்ந்து வந்தான். இந்நாளில், ஓர் அழகிய வேற்றுச் சாதிப் பெண்ணைக் கண்டு காதலித்து அவளைத் தன் இரண்டாம் மனைவியாகத் திருமணம் புரிந்து கொண்டான். அந்நாளில் பலதார மணத்துக்குப் பச்சைக்கொடி காட்டப்பட்ட காலம். ஆனால், அவன் வேற்றுச் சாதிப் பெண்ணை மணந்ததை எதிர்த்து அவன் குலத்தவர்கள் அவனைத் தம் குலத்தை விட்டு ஒதுக்கி வைக்கப் போவதாக அச்சுறுத்தினர். இதற்கஞ்சி நவகோடி நாராயணன் தன் இரண்டாம் மனைவியை விட்டுப் பிரிந்து முதல் மனைவியுடன் கப்பலேறி வேறு நாடொன்றுக்குச் சென்று வாழ்ந்து வந்தான். அவன் அந்த நாட்டில் வைர வியாபாரத்தில் ஈடுபட்டுச் செல்வச் செழிப்புமிக்க வணிகன் ஆனான்.

நவகோடி நாராயணன் தன் இரண்டாம் மனைவியை விட்டுப் பிரிந்த சமயத்தில் அவள் கருவுற்றிருந்தாள். அந்நிலையில் இரண்டாம் மனைவி தனக்கு உதவுவார் எவருமின்றி மனங்குலைந்து, காளிதேவியை நாடி, கண்ணீர் மல்கி, அழுது, புலம்பித் தனக்கு உதவுமாறு இறைஞ்சி நின்றாள். காளிதேவியும் அவள் நிலை கண்டு இரங்கி பிள்ளை பிறந்த பின் உதவுவதாக வாக்குறுதி கொடுத்திருந்தாள்.

அவளும் காளிதேவியை நாள்தோறும் வழிபட்டு வந்தாள். சில மாதங்கள் கழித்து அவள் ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். அக் குழந்தையை நல்ல



கூறி, தன் தகப்பன் யாரெனக் கூறும்படி அடம் பிடித்து நின்றான். தாயும் வேறு வழியின்றி நடந்தேறிய துயரக் கதையை அழுதழுது கூறி, தகப்பனின் பெயரையும் கூறினாள். உடனே அச்சிறுவன் தன் தந்தையைப் பல இடங்களிலும் பல நாட்களாகத் தேடிச் சென்று ஈற்றில் தந்தை இருக்குமிடத்தைக் கண்டு பிடித்தான். பின், தாயிடம் வந்து தந்தை இருக்குமிடத்தைக் கூறி, அவளையும் அழைத்துக் கொண்டு தந்தையிடம் சென்று, தன்னை அறிமுகப்படுத்தி, தன்னையும் தாயையும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டி நின்றான்.

அதற்கு நவகோடி நாராயணன் உன் தாயை எனக்குத் தெரியும். அவளை நான் ஏற்பேன். ஆனால், நீ எனக்குத் தான் பிறந்தவனென்று எனக்குத் தெரியாது. எனவே, உன்னை நான் என் மகனாக ஏற்கமாட்டேன் என்று

முறையில் வளர்த்து வந்தாள். ஐந்து வயதானதும் தன் மகனைப் பாடசாலை ஒன்றில் சேர்ப்பித்துக் கல்வியறிவு புகட்டி வந்தாள். அச்சிறுவனுடைய பாடசாலைத் தோழர்கள் அவனைத் தகப்பன் பெயர் தெரியாதவனென்றும், அநாதையென்றும் பழி கூறிப் பரிகாசம் செய்து துன்புறுத்தி வந்தனர்.

அதனால் மனம் உடைந்த சிறுவன் அழுதவண்ணம் தாயிடம் நடந்ததைக் கூறிவிட்டான். அப்பொழுது காளிதேவி தோன்றி நவகோடிநாராயணா! இவன் உன் மகன் தான். இவளும் உன் மனைவி தான். இவர்களையும் உன் மகனாகவும், மனைவியாகவும் ஏற்றுக்கொள் என்று கூற, நவகோடி நாராயணனும் காளிதேவியை வணங்கிவிட்டு, அவர்களையும் ஏற்றுக்கொண்டு, தன் மகனுக்கு வீரவாணிபன் எனப் பெயரிட்டு, இரு மனைவியர்களுடனும் பிள்ளைகளுடனும் இனிது வாழ்ந்து வந்தான்

என்று கதை முடிகின்றது. இவ்வாறு வளையாபதி வரலாற்றை வைசிய புராணம் கூறுகின்றது. இவ்விரு மனைவியர்களின் பெயர்களும் மறைந்து விட்டன.

மேலும், இச்சிறுவன் சிறிய வயதில் காளிதேவியின் உதவியுடன் இச்செயலைப் புரிந்ததாகக் காப்பியக் கதை கூறுகின்றது. சமணமதக் கொள்கைகளைக் கூறும் இக்காப்பியத்தில் காளிதேவியைப் பற்றிய செய்திகளும், சைவ சமயத்தைச் சார்ந்த நவகோடி நாராயணன் பற்றிய செய்திகளும் இடம் பெற்றிருப்பது ஆய்வுக்கும், தேடலுக்குமுரிய ஒரு விடயமாகும்.

இக் காப்பியத்தின் அனைத்துப் பாடல்களும் கிடைத்திருப்பின், நூலின் கருப்பொருள், சொல் நயம், இலக்கியம், அக்கால வாழ்க்கைமுறை போன்றவற்றைப் படித்து இன்புற்றிருக்கலாம். இவை கிடைக்கப் பெறாதது ஒரு துர்ரதிட்டமே.

பின் வரும் வளையாபதிப் பாடலொன்றை இளம் பூரணர் தொல்காப்பிய உரையில் செய்யுளியல் 98ஆம் நூற்பாவுக்கும், யாப்பருங்கலக்காரிகை விருத்தியுரையாசிரியர் 37ஆம் நூற்பாவுக்கும் நூற்பெயரைக் குறிப்பிடாமல் மேற்கோளாகக் காட்டியுள்ளமை இப்பாடலின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றது. இன்னும், நச்சினார்க்கினியர் தொல்காப்பியச் செய்யுளியல் 148ஆம் நூற்பாவின் உரையில் இப்பாடலை வளைபதிச் செய்யுள் என மேற்கோள் காட்டி இக்காப்பியத்தின் சிறப்பினை உணர்த்தியுள்ளார். மேலும், இப்பாடல் கடவுள் வாழ்த்துப் பாடலாகவும் அமைந்துள்ளமை இன்னொரு சிறப்பாகும்.

"உலகம் மூன்றும் ஒருங்குடன் ஏத்துமாண்
திலகம் ஆயதிறல் அறிவன் அடி
வழுவில் நெஞ்சொடு வாலிதின் ஆற்றவும்
தொழுவல் தொல்வினை நீங்குக என்றுயான்".

இக்காப்பியத்தில் கிடைக்கப் பெற்றுள்ள 72 பாடல்களையும் புறத்திரட்டிலும், இளம்பூரனார் தொல்காப்பிய உரையிலும், நச்சினார்க்கினியர் தொல்காப்பிய உரையிலும், யாப்பருங்கலக்காரிகை விருத்தியுரையிலும், சிலப்பதிகாரம் அடியார்க்கு நல்லார் உரையிலும் மேற்கோள்களாகக் காட்டப்பட்டுள்ளமை, இப்பாடல்களில் பொதிந்துள்ள கருப்பொருள், ஈர்ப்புத் தன்மை, ஆற்றுப்படுத்தல், சொற்பிரயோகம், அறநெறியாற்றல், பிறர்மனை நயவாமை, உயிரோம்பல், ஊன் உண்ணாமை, பொய்யுரையாமை, இளமை நிலையாமை, தவம் நோற்றல், கற்புடை மகளிர், கற்பில் மகளிர், மக்கட்பேறு, உண்டி கொடுத்தலின் உயர்வு, செல்வம் நிலையாமை, பழவினை, நட்பு, நல்குரவு (வறுமை), சாத்தன் தெய்வம் ஆகியவற்றின் நற்சிறப்பினையும் எடுத்துக்காட்டுகின்றது.

இக்காப்பியத்தின் மையப் பொருளை இவ்வாறு கூறலாம். நவகோடி நாராயணன் ஒரு சைவ சமயத்தவன். அவன் அதே குலத்தில் ஒரு பெண்ணை விவாகம் செய்தான். இன்னும் அவன் வேறொரு குலப்பெண்ணைக் காதலித்து விவாகம் புரிந்து அவளைத் தன் இரண்டாம் மனைவியாக ஏற்றுக் கொண்டான். காதல், குலம் பார்ப்பதில்லை. பலதார மணம் பேசப்பட்டுள்ளது. வளையாபதி சமண மதக் கொள்கைகளைக் கூறும் நூல். ஆனால் நவகோடி நாராயணனின் இரண்டாம் மனைவி காளிதேவியை நாடி, வணங்கி நின்று, உதவி கேட்டுப் பெறுகின்றாள். எனவே இந் நூல் குலத்தால், மதத்தால், பலதார மணத்தால் இறுகிய கட்டுக்குள் அமையாது பரந்த நோக்குடன் சிறந்து நிற்பதைக் காண்கின்றோம்.


இன்னும் வர்ணம், குலம், சாதி ஆகியனவும், ஒடுக்குமுறை, சாதிக் கட்டுப்பாடு, குலப்பற்று. பலதார மணம், தெய்வ நம்பிக்கை ஆகியனவும் அக்காலந் தொட்டே இருந்துள்ளன என்பதையும் இக்காப்பியம் எடுத்தியம்பி நிற்கின்றது.

# திருக்குறளில் நட்பு

சூ.யோ. பற்றிமாகரன்

"இலக்கியம் என்பது காலத்தின் உற்பத்தி. ஆயினும் அது காலத்தையும் உற்பவிக்கின்றது". இந்த இலக்கியம் குறித்த கொள்கைக்கு உதாரணமாக விளங்குவது திருக்குறள். "திருக்குறள் கடந்த காலத்தின் உற்பத்திப் பொருள் என்பது மாத்திரமன்று. அதற்கு ஒரு நிகழ்கால இயையும் உண்டு."[2] அதனாலேயே திருக்குறளால் இரண்டாயிரத்து நாற்பத்தாறு ஆண்டுகளைத் தாண்டி இன்றும் மனிதரின் சமகாலப் பிரச்சினைகளுக்குத் தீர்வுக்கான சிந்தனைகளைத் தரமுடிகிறது. உலகத் தமிழ்ச் சங்கம் மதுரை மற்றும் சென்னைப் பல்கலைக் கழகம் இணைந்து நடத்தும் பன்னாட்டுத் திருக்குறள் மாநாடு 2015 திருக்குறட் சிந்தனைகள் வழி மனிதர்கள் வையத்தில் வாழ்வாங்கு வாழும் நிலையை மேலும் ஊக்குவிக்கும் என்பது என் எண்ணம்.

இந்நேரத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள், "வள்ளுவரின் குறளைப் படித்து ஆராய்வதற்கு முன்பு நீங்கள் உங்கள் இலட்சியம் என்ன என்பதைத் தீர்மானித்துக் கொள்ளல் வேண்டும். அதை அடைய வழி முறைகள் குறளிலே இருக்குமா என்றால், தாராளமாக இருக்குமென உறுதியிட்டுச் சொல்வேன். அதற்கான நல்ல வழி, சிறந்த நெறி அதிலே உண்டு. இலட்சியத்தைத் தீர்மானித்துக் கொண்டு வள்ளுவரை நாடினால் நல்ல பலன் கிட்டும்" என்று 26.10.1958ல் சென்னை மீர்சாகிப் பேட்டையிலிருந்த வள்ளுவர் வாசிக சாலையின் 9வது ஆண்டு விழாவில் ஆற்றிய உரையினை இவ்விடத்தில் நினைவுபடுத்த விரும்புகின்றேன். பேரறிஞர் அண்ணாவின் வாக்குக்கமைய இப்பன்னாட்டுத் திருக்குறள் மாநாடும் கூடிக்கலைவதாக இல்லாமல் திருக்குறளின் விழுமியங்களை, இலட்சியங்களைத் தேடி அவற்றை நாடி அவை ஏன் மானிடத்திற்கு இன்றும் என்றும் தேவை



என்பதை விளக்கி, வாடி நிற்கும் மானிடம் பயன்பெறுவதற்கான சிந்தனைச் சக்திகளை வளர்க்க வேண்டும் என்பது என் விருப்பு.

பன்னாட்டு மாநாடுகளின் முக்கிய நோக்கமாக அமைவது பேராளர்களிடையே நட்பை உருவாக்குவது என்பதாகும். எனவே நட்பு என்னும் உன்னதமான மனித இலட்சியத்தை அடையத் திருக்குறள் காட்டும் வழிமுறைகளை "தனிமனித வாழ்வில் விருப்பமுடைமையில் தோன்றி பொது வாழ்வில் வினைக்கரிய காப்பாகும் நட்பு" என்ற தலைப்பில் சுருக்கமாக எடுத்தாராய்வது பன்னாட்டுத் திருக்குறள் மாநாட்டின் வழியாக நட்பென்னும் கருத்தியல் குறித்த தெளிவுக்கு வழிவகுக்கும் என்பது என் எண்ணம் அதுவே இக்கட்டுரையின் நோக்காக அமைகிறது.

நட்புக்கு இரண்டு சமூக வகிர்பாகங்கள் உண்டு. ஒன்று தனி மனித வாழ்வில் நட்பு. மற்றையது பொது வாழ்வில் நட்பு. தனி மனித வாழ்வைப் பொறுத்த மட்டில் நட்பு என்றால் என்ன என்பதைத் தெளிவாக விளங்கிக் கொள்ளுதலும், நட்பு எவ்வாறு நிலைப் பெற்றதாகிறது என்பதனைப் புரிந்து கொள்ளுதலும், நட்பின் பயன் எத்தகையது என்பதை அறிந்து கொள்வதும் முக்கியமானதாகிறது. பொது வாழ்வைப் பொறுத்த மட்டில் நட்பு, செயலைச் செய்வதற்கான, 'உதவு கருவி' யாக இருப்பதால், அது நாட்டை ஆள்பவர்களின், ஒரு செயல் திட்டத்தை நடத்துபவர்களின் பின்னணியில் எடுத்து நோக்கப்பட வேண்டிய ஒன்றாக அமைகிறது. நட்பின் இவ்விரு நிலைகளையும் திருவள்ளுவர் எவ்வாறு எடுத்து விளக்குகின்றார் என்பதைச் சுருக்கமாக எடுத்து நோக்குவதே இக்கட்டுரையின் போக்காக அமைகிறது.

## தனிமனித வாழ்வில் நட்பு

இலண்டனில் இருந்து வெளியாகும் உலகப் புகழ்பெற்ற கார்டியன் நாளிதழ் 30.12.2014ல் பிறக்கப் போகும் 2015ம் ஆண்டைப் பற்றி எதிர்வு கூறுகையில் கவா கிரகம் (GAFA Planet) என்று ஆங்கிலத்தில் சுருக்கமாக அழைக்கப்படும் கூகுல், அப்பிள், பேஸ்புக் அமசோன் கிரகத்தில் (Google, Apple, Facebook, Amazone Planet) நாம் வாழ்கின்றோம் எனக் குறிப்பிட்டது இதற்குக் காரணம். இந்த நான்கு தகவல் தொடர்பு சாதன அமைப்புகளும், உலகில் ஐம்பது வீதமானவர்களை, கடந்த இருபத்தி இரண்டு வருடங்களுள் இணைத்து, 300 பில்லியன் டொலர்களை வருவாயாகப் பெற்று, உலகின் சந்தைப் பொருளாதாரத்திற்கே புதிய வடிவினைக் கொடுத்து, உலகின் நாளாந்த வாழ்வையே மாற்றியுள்ளன. தகவல் பரிமாற்றம் என்பது உலகின் இன்றைய செல் நெறியாக (Mode of Direction) மாறியதன் பின்னர், மனிதனுக்கும் மனிதனுக்குமான நேரடி ஊடாட்டம் என்பது மிகமிகக் குறைந்த அளவிலேயே தனிமனித வாழ்விலும் பொது மனித வாழ்விலும் இடம் பெறுவது நாளாந்தக் காட்சியாக உள்ளது. இதனால் நட்பு என்னும் புனிதமான மனித உறவின் ஆழங்களும் கோலங்களும் சிதைந்து உருமாறிக் கொண்டிருக்கிறது. படித்தெறியும் பத்திரிகை போல் தேவைக்குப் பயன்படுத்தி விட்டுத் தூக்கியெறியும் கலாச்சாரத்துள் (out throw culture) மனிதம் சிக்குண்டு தவிக்கிறது. இதனால் பொது மனித வாழ்வுக்கான உலக கட்டமைப்புக்கள் மட்டுமல்ல, சமுதாயம் குடும்பம் என்னும் தனிமனித வாழ்வின் அடித்தள அமைப்புக்களும் கூட வலுவிழந்து செல்கிறது. இந்நிலையில் 2000ம் ஆண்டுகளுக்கு முன்னரே திருவள்ளுவர் தனிமனித வாழ்வின் உறுதிப்பாட்டுக்கும், பொது மனித வாழ்வின் நிலைத்த தன்மைக்கும், நட்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, இல்லறவியலிலும் அங்கவியலிலும் எடுத்துரைத்த குறள்கள் மனிதத்துவத்தை மண்மீது மறுபிறப்பு அடையவைக்கும் சத்திபடைத்தவையாகக் கண் முன்னே தெரிகின்றன. முதலில் தனி மனித வாழ்வில் நட்பு குறித்த வள்ளுவ சிந்தனைகளைப் பார்ப்போம்.

## உள்ள விருப்பமுடைமையே நட்பு

நண்பு என்னும் சொல்லை முதன் முதலில் இல்லறவியலின் அன்புடைமை அதிகாரத்தின் 4வது குறளும் திருக்குறளின் 74வது குறளுமாகிய,.

"அன்பீனும் ஆர்வம் உடமை அது ஈனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு"

என்னும் குறளில் தான் வள்ளுவர் அறிமுகம் செய்கிறார். இதற்கு "ஒருவனுக்குத் தொடர்புடையார் மாட்டுச் செய்த அன்பு, அத்தன்மையால் பிறர்மாட்டும் விருப்பமுடைமையைத் தரும். அவ் விருப்பமுடமைதான், இவற்றிற்குப் பகையும் நொதுமலும் இல்லையாய், யாவரும் நண்பு என்று சொல்லப்படும் அளவிறந்த சிறப்பினைத் தரும்" [3] என்று 14ம் நூற்றாண்டில் வாழ்ந்தவரும் ; திருக்குறளுக்குத் தலைசிறந்த உரையை எழுதியவருமான பரிமேழலகர் உரைசெய்துள்ளார். கூடவே பரிமேழலகர் "யாவரும் நண்பாதல் எல்லாப் பொருளும் எய்துவதற்கு ஏதுவாகலின், அதனை "நாடாச்சிறப்பு" என்றார் என்று விளக்கமளித்து நண்பாதல் ஒருவர்க்கு யாருடனும் பழகுதற்குப் பகைமையோ, தளர்வோ இல்லாத மனஉறுதியைத் தோற்றுவிப்பதால் அதுவே ஒருவரின் வாழ்வுக்குப் பெரும் சிறப்பைத் தரும் என்பதையும் மனதிருத்துகிறார்.

இக்குறள் ஒருவருடைய மனதில் அன்பு ஏற்படுத்தும் ஆர்வம் வழி இன்னொருவர் மேல் விருப்பமுடமை தோன்றுவதை நண்பாதல் என்கிறது. இந்த விருப்பமுடைமை வழி பிறக்கும் உறவுக்கே நட்பு என்று அழகுத் தமிழ்ப் பெயர் அமைகிறது.

இக்காலத்தில் திருக்குறளுக்கு ஆங்கிலத்தில் "Thirukkural - Pearls of Inspiration" என்னும் தலைப்பில் உரையெழுதி, முன்னாள் இந்திய ஜனாதிபதி முனைவர் ஏ.பி.ஜே அப்துல் கலாம் அவர்களால், "எல்லாத் திருக்குறள் மொழி பெயர்ப்புக்களிலும் தனித்துவமானதும், எளிமையான நடையுள்ளதும், வடிவ வனப்பும் கவிதை வளமும் மிக்கதுமான நூல்", என்று பாராட்டப்பெற்ற, இந் நாள் தமிழகத் தமிழ் வளர்ச்சித்துறை அரசுச் செயலர் முனைவர் எம் ராசாராம் அவர்களும் அன்புடைமை 4வது குறளை

Love Begets the life of love for others
And amity of excellence it yields

என மொழியெர்த்துவிட்டு, அதற்கு விளக்கத்தை ஆங்கிலத்தில் அளிக்கையில், "From Love always springs affection and that gives excellent friendship" என்கிறார். அதாவது "அன்பில் இருந்து எப்பொழுதும் விருப்பமுடைமை மலர்கிறது. அது தலைசிறந்த நட்பினைத் தருகிறது" என்பது இதன் என் தமிழாக்கம். இன்றைய இந்தக் கூற்றும் அன்றைய பரிமேழலகரின் அதே கருத்தினை ஆங்கிலத்தில் உலகிற்கு எடுத்துரைக்கிறது.

எனவே அக்கால இக்கால உரைகள் இரண்டுமே அன்பு தரும் ஆர்வமுடைமை வழி பிறக்கும் விருப்பமுடைமை தரும் உறவே நட்பு என்பதை எக்காலத்திற்கும் உறுதி செய்கின்றன.

## செய்நன்றியின் பரிணாமமே நட்பு

நண்பு என்ற சொல்லாட்சியை அன்புடைமையில் அறிமுகம் செய்த வள்ளுவர் நட்பு என்னும் சொல்லாட்சியை முதன் முதலில் இல்லறவியலின் 11வது அதிகாரமாகிய செய்நன்றி அறிதல் அதிகாரத்தில் ஆறாவது குறளும் திருக்குறளின் 106வது குறளுமான

"மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துள் துப்பாயார் நட்பு"

எனும் குறளில் எமக்கு அறிமுகம் செய்கிறார். இதற்கு "துன்பக் காலத்துத் தனக்குப் பற்றுக் கோடாயினாரது நட்பை விடாதொழிக. அறிவொழுக்கங்களில் குற்றமற்றாரது கேண்மையை மறவாதொழிக." [6] என்று பொருளுரைத்த பரிமேழலகர் "கேண்மை என்பதற்கு 1911ல் வெளி வந்த யாழ்ப்பாணம் சதாஅவதானி நா. கதிரைவேற்பிள்ளை அவர்களின் தமிழ்மொழி அகராதி, உறவு, கண்ணோட்டம், நட்பு என்னும் பொருள்களைத் தருகிறது. அதாவது நட்பினைக் கேண்மை என்று கூறி அதனை உறவின் வகைகளில் ஒன்றாக இக்குறள் பிரகடனப்படுத்துகிறது. அத்துடன் நட்பு ஒருவர்க்காக மற்றவர் உள்ளத்தில் இரங்கும் கண்ணோட்டம் என்ற தன்மை கொண்டது என்பதையும் இக்குறள் தெளிவுபடுத்துகிறது. இத்திருக்குறளை

Never forget the friendship of the pure ones And never desert the timely helpers[7]

என மொழிபெயர்த்த முனைவர் எம் ராசாராம் அவர்களும். "People should neither

forget the friendship of the blameless nor desert those who helped them in distress" என்று அதாவது குற்றமில்லாதவர்களின் நட்பை மறக்கவும் வேண்டாம் துன்பத்து உதவியவர்களைத் துறக்கவும் வேண்டாம் என ஆங்கிலத்தில் விளக்கமும் அளித்துள்ளார்.

அக்கால இக்கால உரைகள் இரண்டுமே தூய்மையான உள்ளத்துடன் பழகுபவரின் நட்பையும் துன்பத்துள் துணைசெய்தார் நட்பையும் மறத்தல் துறத்தல் கூடாது என்கின்றன. இந்த செய்நன்றி அறிதல் பண்பு எந்த அளவுக்கு வளர்கிறதோ அந்த அளவுக்குத் தான் நட்பும் பற்று உறுதியுடன் பரிணமிக்கும். ஆகவே செய்நன்றி அறிதல் பண்பு வளர்க்கப்பட்டாலே உண்மையான நட்பு நிலைபெற்று, இன்றைய தூக்கி வீசும் கலாச்சாரத்திலிருந்து மனிதன் விடுபட உதவும் என்பது எடுத்த எடுப்பிலேயே வள்ளுவம் காட்டும் வழியாகிறது.

### துன்பத்தில் உதவியோரை மறவாதோரே நல்லோர் / பெரியோர்

எனவே செய்நன்றி அறிதல் வழி பிறக்கும் நட்பைக் காலமெல்லாம் கட்டிக் காக்க வேண்டுமென்பது வள்ளுவ ஆணையாக அமைகிறது.

எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு

என்னும் அக்குறளுக்கு "தம் கண் எய்திய துன்பத்தை நீக்கினவருடைய நட்பினை எனப் பரிமேழலகர் விளக்கமளித்து துன்பம் துடைத்தவர் நட்பை மறவாது பேணுபவர்கள் நல்லோர் என்று பாராட்டும் வழங்குகின்றார். இன்றைய நவீனயுகத்தில் பெரியோர் "The Great" எனப் போற்றப்படும் தன்மை இந்த தமக்குத் துன்பத்தில் உதவியோர் நட்பை மறவாதவர்களுக்கே உரியது என்பது முனைவர் எம் ராசாராம் அவர்களின் இக்குறளுக்கான மொழிபெயர்ப்பு தரும் அருமையான விளக்கமாக அமைகிறது.

"The good will remember in all seven births
Amity of those who dispelled their distress."

எனக் குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த முனைவர் எம் ராசாராம் அவர்கள் "The great will remember in all seven births the friendship of those who helped them in their distress" என இக்கால ஆங்கிலத்தில் அதற்கான விளக்கத்தைத் தந்துள்ளார். மாசற்றோராய் வாழ்பவர்களை மறவாது வாழ்தலும் துன்பத்துள் உதவியோரைத் தேவைக்குப் பயன்படுத்தி விட்டுத் தூக்கி வீசாது வாழ்வதும், இன்றைய உலகின் பொதுக் கலாச்சாரமாகவே மாறிவிட்ட தூக்கி வீசும் கலாச்சாரத்தை (out throw culture) நடைமுறை வழிகளாகின்றன. இவையே நட்பு என்னும் மகத்தான மனித உறவை உலகில் நிலைபெற வைப்பதற்கான கருவிகளாகவும் இலங்குகின்றன.

### சுற்றம், துணை குறித்த சிறப்பான விளக்கம்

நட்புக்கும் நாம் நாளாந்த வாழ்வில் கொள்ளும் மனிதத் தொடர்புகளான, 'சுற்றம்' துணை' போன்றவற்றுக்கும் இடையில் உள்ள நுட்பமான வேறுபாடுகளைத் தெரிந்தாலே தனிமனித வாழ்வில் நட்பின் பங்கிற்கும், பொது மனித வாழ்வில் நட்பின் பங்கிற்கும் உள்ள நுணுக்கமான வேறுபாட்டைத் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். இதனாலேயே சுற்றம், துணை குறித்த விளக்கத்தைப் பரிமேழலகர் நட்பு அதிகாரத்து 1வது குறளுக்கான விளக்கத்திலேயே குறிப்பிட்டு விடுவதைக் காண்கிறோம்.

"செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு"

என்னும் 79ம் அதிகாரமான நட்பு அதிகாரத்தின் முதற்குறளான இக்குறளுக்கு "நட்புப் போலச் செய்து கோடற்கு அரிய பொருள்கள் யாவை உள? அது போலப் பகைவர் செய்யும் வினைக்குப் புகற்கு அரிய காவலாவன யாவை உள?"[8] என்று பரிமேழலகர் பொருள் உரைத்துள்ளார். தொடர்ந்து அவர் அளித்துள்ள விளக்கத்தில் "நட்புத்தான் இயற்கை செயற்கை என இருவகைப்படும். அவற்றுள் இயற்கை, பிறப்பு முறையானாயதூஉம், தேயமுறையானாயதூஉம் என இருவகைப்படும். அவற்றுள் முன்னையது சுற்றமாகலின் அது 'சுற்றந்தழா'லில் அடங்கிற்று. ஏனையது

பகையிடையிட்ட தேயத்ததாகலின் அது துணைவலி என வலியறிதலுள் அடங்கிற்று. இனி ஈண்டுச் சொல்லப்படுவது முன் செய்த உதவிபற்றி வருஞ்செய்கையாகலின், அதன் சிறப்பு இதனால் கூறப்பட்டது"[9] என்கிறார்.

நாம் பிறக்கும் குடும்பத்தின் வழி வரும் உறவுகள் பிறப்பு வழியாக வரும் சுற்றம் ஆகின்றனர். அவ்வாறே நாம் வாழும் நாட்டின் நாட்டு மக்கள் என்ற வழி வரும் உறவுகளும் சுற்றம் தான். நாடு பகைமையை எதிர்கொள்ளும் நேரத்தில் ஒரு தேயத்தவர் சுற்றமாக நிற்கும் தன்மை தெளிவாகப் புலப்படும். ஆனால் நட்பு என்பது செய்நன்றியை மனதிருத்தி வளரும் உளப்பண்பு என்பது நட்புக்கும் சுற்றத்துக்கும் இடையேயான வேறுபாடாகின்றது. இவ்விடத்தில் சுற்றமாக யாரைக் கொள்ளலாம் என்பது முக்கியம் பெறுகின்றது.

பற்றற்ற கண்ணும் பழைமைபா ராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே உள

(பொருள்: அரசு :521)

என்று சுற்றத்தார் என்றால் யார் எனத் தெளிவாக விளக்குகிறார். "ஒருவன். செல்வம் தொலைந்து வறியனாய வழியும் விடாது தம்மோடு அவனிடைப் பழைமையை எடுத்துக் கொண்டாடும் இயல்புகள் சுற்றத்தார் மாட்டே உள ஆவன" என்று இதற்குப் பரிமேழலகர் விளக்கமளித்துள்ளார். இவ்வாறு அன்பு அறாத உண்மையான சுற்றம் உள்ளவர்க்கு கிளைத்தல் அறாத செல்வப் பெருக்குத் தொடரும் என்பது அடுத்த குறளாக அமைகிறது.

"விருப்பறாச் சுற்றம் இயையின் அருப்பறா

ஆக்கம் பலவும் தரும்" (522)

என்னும் அக்குறளுக்கு "அன்பு அறாத சுற்றம் ஒருவர்க்கு எய்துமாயின் அஃது அவற்றுக்குக் கிளைத்தல் அறாத செல்வங்கள் பலவற்றையும் கொடுக்கும்" என்று பரிமேழலகர் உரை அமைகிறது.

**துணை என்னும் நிலையிலமையும் உறவு**

மேலும் துணை என்னும் நிலையில் அமையும் உறவு குறித்தும் வள்ளுவர் வலிஅறிதல் முதலாவது குறளில் எடுத்து விளக்குகின்றார்.

வினைவலியுந் தன்வலியும் மாற்றான் வலியும்

துணைவலியுந் தூக்கிச் செயல் (471)

என்னும் அக்குறளுக்கு "தான் செய்யக் கருதிய வினைவலியையும், அதனைச் செய்து முடிக்கும் தன்வலியையும், அதனை விலக்கலுறும் மாற்றான் வலியையும், இருவர்க்கும் துணையாவார் வலிமையையும், சீர்தூக்கித் தன் வலிமிகு மாயின் அவ்வினையைச் செய்க"[12] எனப் பரிமேழலகர் உரையமைகிறது. இங்கு துணையாக இருப்பவர்கள் என்கிற ஒரு உறவுத் தொகுதியினையும் அதன் முக்கியத்துவத்தையும் வள்ளுவர் வழி பரிமேழலகர் தெளிவுபடுத்துகின்றார். இந்தத் துணை என்பதைச் சரியாகப் புரிந்து கொண்டு

இதனை இதனான் இவன்முடிக்கும் என்றாய்ந்
ததனை அவன்கண் விடல் ( : 517)

என்னும் தெரிந்துவினையாடல் 517வது குறளுக்கு ஏற்பச் செயற்படுகின்ற பொழுதே நல்ல தலைமையுள்ளவர்களாக மாறலாம் என்பது மட்டுமல்ல பொறுப்பைக் கொடுத்தவர்கள் அதனைச் செய்யாது விடுகையில் பகைமை கொள்கிற நிலையில் இருந்தும் விடுபட்டு நட்பை நீண்டகாலத்திற்குப் பேணமுடியும். இக்குறள் அரசியலில் கூறப்பட்டிருந்தாலும் தனி மனித நட்பின் நிலைத்த தன்மைக்கும் அவசியமானதாகிறது.

## இரண்டாவது பகுதி : பொது வாழ்வில் வினைக்கரிய காப்பாகும் நட்பு

இன்று முடியாட்சி குடியாட்சியாக மாறினாலும் படைமாட்சி படைச்செருக்கைத் தருகின்ற நேரத்தில் எல்லைகளை விரிவாக்கவும், தம் அரசின் நலன்களை வலுவாக்கவும் முயல்வது அரசுக்களின் இயல்பாகவே தொடர்கிறது. இதனால் உருவாகும் முரண்பாடுகளாலும் யுத்தங்களினாலும் போர்களினாலும் இன்றைய உலகின் 50 வீதமானவர்களுக்கு மேற்பட்டவர்கள் அகதிகளாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பது 2014ம் ஆண்டு உலக அகதிகள்



தினமான யூன் 20ல் ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளர் பாகீமூன் அவர்களின் உரையாக உள்ளது. 2013ம் ஆணடில் மட்டும் பத்து மில்லியன் மக்கள் அகதிகளாகியுள்ளனர். ஒவ்வொரு பதினைந்து நிமிடத்திற்கு ஒரு குடும்பம் அகதியாக மாறும் காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இது தான் இன்றைய விஞ்ஞான தொழில் நுட்ப தரவுப் பரிமாற்ற வளர்ச்சிகள் பெற்ற உலகின் நிலை என்கின்ற பொழுது மனித நேயம் மானிட நட்புக் குறித்த சிந்தனைகள் பொது மனித வாழ்விலும் காலத்தின் தேவையாகின்றது.

மனித மனதில் இருந்து தான் யுத்தம் தொடங்குகின்றது என்றால் அதே மனித மனதில் தான் அமைதி பாதுகாக்கப்படல் வேண்டும் என்கிற எண்ணமும் கட்டி எழுப்பப்பட வேண்டும். இதனால் தான் 2011 முதல் பன்னாட்டு நட்புத் தினம் யூலை 30ல் ஐக்கிய நாடுகள் சபையினால் உலகெங்கும் கொண்டாடப்பட்டு வருகிறது. தேசங்களுக்கு இடையில் நட்புறவை வளர்த்தல் என்பது ஐக்கிய நாடுகள் சபையின் நோக்கங்களில் ஒன்று. ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி அறிவியல் பண்பாட்டு முன்னேற்றத்திற்கான அமைப்பும் அமைதியின் தேவை குறித்துப் பேசுகையில், "அரசாங்கங்களின் அரசியல் பொருளாதார ஒழுங்குபடுத்தல்களில் மட்டுமல்ல, மனித இனத்தின் அறநெறிகளினதும், புத்தி ஜீவித்தனத்தினதும், ஒன்றிப்பிலும் அமைதி தங்கியுள்ளது" எனத் தெளிவாக எடுத்துரைக்கின்றது. ஐக்கிய நாடுகள் சபையின் மனித நாகரிகங்களின் கூட்டமைப்பும், "தீவிரவாதத்திற்கு எதிர்ச் சத்தியாக நாடுகளிடையும் உலக மக்களின் கலாச்சாரங்களுக்கிடையிலும் மதங்களுக்கு இடையிலும் புரிதல் தன்மைகளையும் ஒத்துழைப்புக்களையும் வளர்ப்பதற்கான முயற்சிகளைச் செய்தல் வேண்டும்" என்கிறது.

இன்று ஐக்கிய நாடுகள் சபை உலகின் பாதுகாப்புக்கும் அமைதிக்கும் நட்பு குறித்து அக்கறை காட்டுவதற்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே வள்ளுவர் படைமாட்சியும் படைச்செருக்கும் உலக அமைதியைக் குலைக்கும் என்ற உண்மையை உணர்ந்து அவை குறித்துப் பேசியவுடனேயே நட்புக் குறித்துப் பேசிய நுட்பத்தையும் இராஜ தந்திரத்தையும் காண்கின்றோம். அவற்றை இங்கு முழு அளவில் எடுத்து நோக்க எட்டுப்பக்க இடம் போதாது என்பதினால் வகை மாதிரியாக அங்கவியலில் உள்ள திருக்குறளின் 79ம் அதிகாரமான நட்பை மட்டும் எடுத்து நோக்குவோம். "நின்ற நீர நீரவர் கேண்மை பிறைமதிப் பின்னிரே பேதையார் நட்பு" (பொருள் : அங்கம் : 782) என்னும் குறளில். "அறிவுடையார் நட்புகள் பிறை நிறையுந் தன்மை போல நாள்தோறும் நிறையுந்தன்மையவாம், மற்றைப்

பேதைமையுடையார் நட்புகள் நிறைந்த மதி பின் குறையுந் தன்மை போல நாள்தோறும் குறையுந்தன்மையவாம்"[14]. என்கிறார். இங்கு நீரவர் என்று நண்பர்களைச் சுட்டுவதால் நீர் தாகத்தைத் தீர்த்து உயிர்ப்புச் சத்தியாக விளங்குவது போல நண்பர்கள் களைத்தவிடத்து இளைத்து விடாது இடை நிறுத்தி விடாது செயலை முடிக்க உதவும் உயிர்ப்பு தரும் சத்தி என்பதை வள்ளுவர் மனதிருத்துகிறார். அதே வேளை உறவு என்பதைக் குறிக்கும் கேண்மை என்ற சொல்லாட்சியை அறிவார்ந்து சிந்திக்கும் நண்பர்க்கும், அறியாமையைக் குறிக்கும் பேதைமை என்ற சொல்லாட்சியை உணர்ச்சி வழி சிந்திக்கும் நண்பர்களுக்கும் வள்ளுவர் அளித்து, அறியாமையே உணர்ச்சிகளைத் தூண்டிச் செயல்கள் இனிது நிறைவேறாது தடுத்து விடுகின்றன என்பதையும் சுட்டிக் காட்டுகின்றார்.

"நவில்தொறும் நூனயம் போலும் பயில்தொறும் பண்புடையாளர் தொடர்பு" (பொருள் 783) என்பதினால் வள்ளுவர் நூலைப் படிக்கப் படிக்க அதன் பொருண்மை, இனிமை, வளமை மனதில் நிலைபெறுவது போல பண்பு என்னும் சிறப்புடை நண்பர்களுடன் பழகப்பழக உறவில் உறுதியும், இனிமையும், வளமையும் பெருகும் என்று எடுத்துரைக்கின்றார

"நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண் மேற்சென்றிடித்தற் பொருட்டு" என்னும் 784வது குறளுக்கு "ஒருவனோடு ஒருவன் நட்புச் செய்தல் தம்முள் நகுதற்கு இயைந்தன சொல்லி நகையாடற் பொருட்டன்று, அவர்க்கு வேண்டாத செய்கை உளதாய வழி முற்பட்டுக் கழறுதற் பொருட்டு" என்னும் பரிமேழலகர் நல்ல நட்பின் பயன் என்றும் இதனைச் சுட்டிக் காட்டுகின்றார். கழறுதல் என்பது உறுதியுடன் வற்புறுத்திக் கூறல். இதற்கு கலந்து பழகுதல் என்பதற்கு அப்பால் ஒத்த உணர்ச்சியுடன் பழகுதல் அவசியம். அப்பொழுது தான் நண்பனின் நட்பு உரிமையாக மாறும். அந்த உரிமை தான் இடித்துரைக்கிற தன்மையையும் ஏற்கிற தன்மையையும் கொடுக்கும். ஒத்தவுணர்ச்சி, உள்ள அன்பு, துன்பம் துடைத்தல், உடனுதவுதல், தாங்கும் உள்ளம், சொல்லில் அல்லாது செயலால் நட்பை வெளிப்படுத்தல் என்பனதான் நட்பு என்பதனை அடுத்து வரும் ஐந்து குறள்களிலும் வள்ளுவர் தெளிவாக எடுத்துரைக்கின்றார்.

"புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சி தான் நட்பாங் கிழமை தரும்" என்னும் 785வது குறளில் கலந்து பழகாத நிலையிலும் ஒத்த உள்ளவுணர்வே நட்பென்னும் உரிமை தரும் என்கிறார் வள்ளுவர் "ஒருவனோடு ஒருவன் நட்பாதற்குப் புணர்ச்சியும் பழகுதலுமாகிய காரணங்கள் வேண்டுவதில்லை. இருவர்க்கும் ஒத்த உணர்ச்சி தானே நட்பாம் உரிமையைக் கொடுக்கும்" என்பது பரிமேழலகரின் உரை. இங்கு புணர்ச்சி என்பதற்குப் பரிமேழலகர் ஒரு தேயத்தாராதல் என்று விளக்கமளித்து அரசியல் பணிவு என்பதின் வழி தேசத்தவர் என்ற உணர்வு தோன்றுகிறதென்ற இக்கால அரசியல் விஞ்ஞானக் கருத்தினை அன்றே தமிழர் கொண்டிருந்ததை வெளிப்படுத்துகின்றார். பிசிராந்தையர் பாண்டிய மன்னராட்சியில் வாழ்ந்திருந்த போதிலும் மக்கள் நல ஆட்சி செலுத்திய கோப்பெருஞ்சோழனுக்குக் காட்டிய அரசியல் பணிவே அவரை நட்பிற்கான இலக்கியமாக இலங்கவைத்தது என்பது சங்கத்தமிழ் தரும் செய்தியாக உள்ளது. பிசிராந்தையார் முகத்தளவு நட்பாகக் கோப்பெருஞ்சோழனைப் பற்றிக் கவிபாடாது, அகத்தளவு உறவாக அதனைப் போற்றியமை அவர் வரலாறாக உள்ளது. அவ்வாறே முகத்தளவில் நட்புக் கொள்ளாது அகத்தளவு நட்புக் கொள்ளுங்கள் என வள்ளுவர் தந்த குறளே அடுத்த குறளான "முகநக நட்பது நட்பன்று நெஞ்சத் - தகநக நட்பது நட்பு" (786) என்பது. இதற்குப் பரிமேழலகர் "கண்டவழி அகமொழிய முகம் மாத்திரமே மலரும் வகை நட்பது நட்பாகாது. அன்பால் அகமும் மலர நட்பதே நட்பாவது" என்று பொருளுரைக்கின்றார். முகத்துக்குப் பேசுவதல்ல நட்பு என்பது, உள்ள உறவாக நட்பை மாற்றுகையில், நண்பனின் துயரத்தைத் தன்துயரமாகக் கருதி, அதனை மாற்றிட விருப்பும் உள்ள வேட்கையால் நண்பனின் துன்பத்தைத் தானும் உடனனுபவிக்கும் உறுதி பிறக்கும். இத்தகைய துன்பத்தை மாற்றும் உறுதிள்ளதே நட்பு.

"அழிவினவை நீக்கி ஆறுய்த் தழிவின் கண் அல்லல் உழப்பதாம் நட்பு" (பொருள் :அங்கம்:787) நண்பன் கேட்டினைத் தரும் தீயநெறிகளுள் செல்லுங்கால் விலக்கி, ஏனைய நன்னெறிகளுள் நண்பன் செல்லுங்கால் செலுத்தி, தெய்வத்தால், மானிட அறிவால் முயற்சியால் கட்டுப்படுத்த இயலாத அழிவு வந்திட்டால், அத் துன்பத்தை நண்பன் உடனிருந்து அனுபவிப்பதே நட்பு. எனவே நேரமுகாமைத்துவம் ஒன்றும் நட்பில் உண்டு. அது துன்பகாலத்தில் விட்டுப் பிரியாது உடனுதவுதல் என்பதாகும்.

"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு" (788) அவையிடை ஆடை குலைந்தவனுக்கு அப்பொழுதே கை சென்று உதவி அவ்விளிவரல் களையுமாறு போல நட்டவனுக்கு இடுக்கண் வந்துழி அப்பொழுதே சென்று உதவி அதனைக் களைவதே நட்பு. இவ்வாறு உடனுதவும் தன்மையே நட்பு நிலைத்து நிற்பதற்கான அரசிருக்கையாகும்.

"நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனிற் கொட்பின்றி ஒல்லும்வாய் ஊன்றும் நிலை", (790) என்னும் குறளில் "நட்பினுக்கு அரசிருக்கை யாதெனின் அறம் பொருள்களில் நண்பனுக்குத் தளர்ச்சி ஏற்படும் பொழுதும் அவனைத் தாங்குகின்ற நிலை" என்கிறார் வள்ளுவர். அதாவது துன்பம் துடைக்கும் செயலால் அறம் வளர்க்கும் பண்பால் நான் உனக்கு நண்பன் என்பதை உணர்த்த வேண்டுமே தவிர உனக்கு நான் நண்பனென்று வாயால் பேசுவதால் அல்ல.

"இனையர் இவரெமக் கின்னம்யாம் என்று புனையினும் புல்லென்னும் நட்பு" என்பதினால் வள்ளுவர் நட்பு உணரப்பட்டு வாழப்படுவது என்பதை எடுத்துரைக்கிறார். "இவர் நமக்கு இத்துணையன்பினர் யாம் இவர்க்கு இத்தன்மையம் என்று ஒருவரையொருவர் புனைந்து சொல்லினும் நட்புப் புல்லிதாய்த் தோன்றும்" என்கிறார். பரிமேழலகர் தனிமனிதனாயினும் நாடுகள் ஆயினும் வாழும் பொழுது உதவும் வகைகண்டு மற்றவர்கள் நட்பென்று உரைக்க வேண்டுமே தவிர வாயால் நண்பர்கள் என்றோ நட்புநாடு என்றோ சொல்வதில் பயனில்லை.

இவ்வாறு நட்பு என்னும் அதிகாரத்தில் சொல்லியபடி, நட்புள்ளதா என நட்பாராய்தலும், நட்பின் பழமையைக் கருதி தவறுகளைப் பொறுப்பதும் ஏற்பதும், தீயகுணங்கள் உள்ளாரது நட்பைத் தவிர்த்தலும், தருணம் பார்த்துக் கழுத்தறுக்கும் கூடா நண்பரை விலக்கலும், நட்பு சிறப்படைவதற்கான வழிகளாக வள்ளுவர் அடுத்த 4 அதிகாரங்களில் எடுத்துரைக்கின்றார். பேதைமை என்னும் அறியாமை, தன் நிலை உணராது தன்னைப் பெரியவனாக நினைந்து மற்றவர்களை குறைவாக மதிப்பிடும் புல்லறிவாண்மை, மற்றவர்களுடன் சேர்ந்து வாழ்வதை மறுக்கும் இகல் என்னும் தனிமைக்குணம் (isolation), உடையோர் நட்பை விலத்தி, யாருடனும் பகைமை பாராட்டாது, பகையைக் கையாளும் பகைமாட்சியுடன்,விளையாட்டுக்கு என்கிலும் பகைமை வரக்கூடியனவற்றைச் செய்யாதவாறு பகைத்திறன் தெரிந்து வாழ்ந்து, உட்பகையைக் கண்டறிந்து, பெரியார்களை அவமதிக்காது வாழும் வாழ்விலும் நாட்டிலும் நட்பு சிறக்கும் என்பது வள்ளுவர் வாக்கு. இவற்றுடன் பெண் வழிச்சேறல் என்னும் மனைவியுடன் காமத்திற்காய் அடிமையாதல், வரைவில் மகளிர் உடன் இன்பத்திற்காய் அடிமையாதல், கள்ளுக்கு அடிமையாதல், சூதுக்கு அடிமையாதல் என்பவற்றையும் தவிர்த்து இவற்றுக்கு அடிமையானால் அதனால் உடலுக்கு உள்ளத்து வரும் நோய்களை விலத்தவும் நற்சுகத்துடன் வாழவும் மருந்து குறித்த தெளிவான அறிவையும் வளர்த்து வாழ்தல், நட்புறவுடன் நானிலத்தில் வாழ்வதற்கு அவசியம் என்பதையும் வள்ளுவர் விளக்கி, மொத்தம் 17 அதிகாரங்களாலான 'நட்பியலில்' தனிமனித வாழ்வில் விருப்பமுடைமையில் தோன்றி பொது வாழ்வில் வினைக்கரிய காப்பாகும் நட்பினை நமக்காக விளக்குகின்றார்.

**சூ.யோ. பற்றிமாகரன்** B.A. Special Diploma (Oxford), BSc, PG Diploma, MA (Politics of Democracy), MA (Tamil). ஆசிரியர், ஊடகவியலாளர், ஆய்வாளர் - ஒக்ஸ்வேர்ட், ஐக்கிய இராச்சியம்

# தமிழ் ஏற்றம் பெற...


- முனைவர் கா. அரங்கசாமி

தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை, அறிவியல் தமிழ்க் கல்லூரி, தாழ்ந்து நலிந்து வரும் தமிழ், ஏற்றம் பெறுவதற்கான வழிமுறைகளைச் சிந்திப்பதற்கு முன்வந்திருப்பது போற்றுதற்குரிய ஒரு முன் முயற்சியாகும். இம்முயற்சிக்குத் துணை நிற்பது அனைத்துத் துறைசார்ந்த தமிழரின் கடமையாகும் எனக் கூறுவதில் மாற்றுக் கருத்தினுக்கு இடமில்லை.

தமிழர்கள், 1. பண்டிதத்தமிழர், 2. படித்த தமிழர், 3. பாமரத் தமிழர் என மூவகையினராகப் பிரிந்து நிற்கின்றனர். இவர்களுள் முதல் வகையினர் காலமாறுபாட்டையோ, அறிவியலின் அளப்பரும் வளர்ச்சியினையோ கருத்தில் கொள்ளாமல் தமிழ் இலக்கியங்களிலேயே தம்மை இழந்து நிற்பவர்கள். இரண்டாவது வகையினரான படித்த தமிழர்களோ, தமது மொழியின் அருமையினையோ, பண்பாட்டின் சிறப்பினையோ உணராமல், வயிற்றுப்பாட்டையே பெரும்பாடாகக் கருதி, தாம் பிறமொழியில் பயின்ற கல்விக்கான அறிவுத் தெளிவின்றித் தமக்குக் கிடைக்கும் பொருளாதார முன்னேற்றத்தையே வாழ்வின் பயனாகக் கருதி வாழ்ந்து மடிகின்றனர். மூன்றாவது வகையினரான பாமரர்கள் அன்றாடம் வயிற்றுக்குத் தேடுவதிலும், அற்பக் களியாட்டங்களில் தம்மை இழந்து தமது இருப்பு நிலையைக்கூட உணர முடியாத மாக்களாய் வாழ்கின்றனர்.

கி.பி. இரண்டாம் நூற்றாண்டு முதல் இன்றளவும் தமிழ்ச் சமூகம் ஓர் அடிமைச் சமூகமாகவே இருந்து வருகின்றது. அன்னியர் ஆட்சியும், அன்னிய மொழிகளின் ஆட்சியும், தமிழ் இனத்தின் ஒற்றுமை இன்மையும் தமிழ் மொழிக்கும், மரபுக்கும், பண்பாட்டிற்கும் ஊறு செய்வனவாகவே இருந்தன; இருக்கின்றன. ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளாக வருகின்ற இவ்வடிமைச் சமூகம், இடைக்காலத்தில் அருளாளர் சிலரால் தனது சமயங்களான சைவ, வைணவத்தில் மறுமலர்ச்சி பெற்றது. அதன்பின் இடைக்காலப் பாண்டியர்களும், சோழர்களுமான மன்னர்கள் தமிழர்களாக இருப்பினும், அவர்கள் வடமொழிக்குமன, வைதிக வேதமதத்திற்கும் அடிமைகளாக இருந்தனர்.

இக்காலத்தில் தமிழ், திருக்கோயில் வழிபாட்டிலிருந்து பெரும்பாலும் அகற்றப்பெற்றது. கோயில்கள் வேதபாட சாலைகளாக இருந்தன. திருக்கோயில் மூர்த்தங்களின் அழகிய தமிழ்ப் பெயர்கள் வடமொழியாக்கம் பெற்றன. திருக்கோயில்களுக்குத் தலபுராணம் என்ற பெயரில் புனை கதைகள் புனையப்பெற்றன. தமிழ்த் தெய்வங்களின் வழிபாட்டுவேர்கள் வேதங்களில் ஊன்றப் பெற்றன. இவையெல்லாம் இன்றைய தமிழ்ச் சமூகத்தின் தாய்மொழிப் பற்றின்மைக்குப் பெரிதும் காரணமாயிற்று எனக் கூறுவதை ஆய்வது இன்றியமையாததாகும்.



வேதங்களும், வேள்விகளும் மிகப் புனிதமானவையாகப் பரப்புரை செய்யப்பெற்றன. ஆனால் அவை பெரும்பான்மையான மக்களிடமிருந்து அவர்கள் தெரிந்து கொள்ளாத வண்ணம் பாதுகாக்கப் பெற்றன. அதிகாரத்தில் இருந்த அரசனுள்ளிட்ட சிறு குழுவும், வேத விற்பன்னர்களும் எளிய பொதுமக்களுக்கு எட்டாத இடத்தில் வீற்றிருந்தனர்.

பெரும்பான்மையோர் பேசும் தாய்மொழிக்குக் கிடைக்காத செல்வாக்கு ஆளும் வர்க்கத்தோரால் மதிக்கப்பெற்ற அந்நிய மொழிக்குக் கிடைப்பதைக் கண்டு பெரும்பான்மையோரான பொது மக்கள் செல்வமும் செல்வாக்கும் உள்ளவர்களைவிடத் தம்மைத் தாழ்ந்தவர்களாக நினைத்துக் கொண்டது மட்டுமின்றித் தாம் பேசும் மொழியையும் தாழ்ந்ததாகக் கொண்டனர். இந்த இழிதகைமை இருபதாம் நூற்றாண்டிலும் தொடர்ந்ததைக் கண்டோம். தமிழை "நீசபாஷை" எனக் கூறிய மடாதிபதிகளின் கால்களில் நாணமற்ற சுயமதிப்பற்ற தமிழர்கள் வீழ்ந்து வணங்கியதைக் கண்டோம்.

பொதுவாக மனிதர்களைச் சமூகமாகச் சேர்ப்பவை இனம், மொழி, சமயம் முதலியன. இவற்றுள்ளும் இனமும் மொழியும் பெரும்பாலும் இணைபிரியாதவை. சமயமும் ஓர் இனத்தில் தோன்றிய மாசறுகாட்சி மாண்புடையோரால் அவ்வினத்தின் மொழியில் வெளிப்படுத்தப் பெறும் மெய்ப்பொருளாகும். அங்ஙனம் சமயங்களை வெளிப்படுத்திய மொழிகளாக ஹிப்புரு, லத்தீன், வடமொழி, பாலி, சீக்கியம், அராபிக், தமிழ், சீனம் முதலானவையாம். இவற்றுள் தமிழைத் தவிர ஏனைய மொழிகள் அவ்வச் சமயத்தோரால் புனிதமொழிகளாகப் போற்றப் பெறுகின்றன. மதிக்கப் பெறுகின்றன. அவற்றில் புலமை பெற்றோர் போற்றப் பெறுகின்றனர். ஆனால் தமிழ் என்னவாயிற்று என்பதுதான் கேள்வி! "சொன்னால் விரோதமிது" ஆனாலும் சொல்லலாம்.

எலும்பைப் பெண்ணாக்கியதும் முதலைவாய்ப் பிள்ளையைத் திரும்பக் கொணர்ந்தும், கற்பாறை தெப்பமாக மிதந்ததும், இன்னும் இதுபோன்ற பல அற்புதத் தெய்வச் செயல்களை நிகழ்த்தியதுமான தெய்வத் தமிழ் திருக்கோயிலில் தீட்டுப்பட்டு நிற்கிறதே! "ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய் நிற்கும் தமிழர்களுக்கு ஏன் உறைக்கவில்லை? ஏனென்றால் தமிழ்ச் சமயங்கள் தமிழர்களிடமிருந்து அன்னியப்படுத்தப்பெற்றன. அதனால் தமிழகத்தின் தாய்மார்களுக்குத் தமது சமய நூல்கள் தெரியவில்லை! அதனால் அவர்களின் குழந்தைகளுக்கும் சமயவாழ்வு பறிக்கப்பெற்றது. ஒரு கிறித்தவக் குழந்தையோ, இசுலாமியக் குழந்தையோ, பௌத்தக் குழந்தையோ, சீக்கியக் குழந்தையோ வளர்வதைப் போன்று ஒரு சைவக் குழந்தையோ, வைணவக்

குழந்தையோ வளர்வதில்லை. ஏனென்றால் அச்சமயங்களின் தமிழ்ச்சிந்தனைகளும், தமிழ்வழி பாட்டுப்பாடல்களும் மறைக்கப்பெற்று அவற்றிற்கு ஏராளமான வடமொழிப்புராண, தத்துவமரபு வண்ணங்கள் பூசப்பெற்றிருக்கின்றன. ஒரு சமூகத்தின் மொழி அச்சமூகத்தின் மீது தனது ஆன்மிகச் செல்வாக்கை இழந்து விடுமானால் அதனை அச்சமூகமே மதித்துப் போற்றாது. இந்த நிலையினை மாற்ற வேண்டிப் பல திருமடங்களும், தமிழ் அமைப்புகளும் போராடி வருகின்றன என்பது உண்மையாயினும் தமிழ் தமிழரின் ஆன்மிக அரியணையில் ஏறி அமரும்நாள் எந்நாளோ?

நாம் மேலே பகுத்த மூவகைத் தமிழர்களில் பண்டிதத் தமிழர்கள் மட்டும்தான் தமிழின் உயர்வுக்காகப் போராடி வருகின்றனர். இதற்குச் சான்று தமிழின் ஏற்றத்திற்காக மாநாடு கூட்டுவதும் இன்று ஒரு திருமடத்தைச் சார்ந்த கல்லூரி என்பதே போதுமானது. இம்மாநாட்டில் உணர்வுப்பூர்வமாக எத்தனை பொறியியலாளர்கள், மருத்துவர்கள், கல்வியாளர்கள் என்று தம்மைப் பல்கலைக்கழகப் பட்டங்களால் அலங்கரித்துக் கொண்டிருப்பவர்கள் உண்மையான தாய் மொழிப்பற்றுள்ள அரசியல்வாதிகள் கலந்து கொள்வார்கள்? அத்தகையோர் கலந்து கொண்டால்தான் தமிழுக்கு ஏற்றம் வரும். எங்குந்தமிழ் எதிலும் தமிழ் என்ற கனவு நனவாகும்.

பணம் சேர்ப்பதைக் கொள்கையாகக் கொண்ட ஒரு தனி மனிதனோ அல்லது ஒரு நிறுவனமோ தம் சுயநலத்தைத் தவிர வேறு பற்றுக்களை வைத்துக் கொள்வதில்லை. இன்று தமிழகத்தில் இத்தகைய தனிமனிதர்களும், நிறுவனங்களும் நிறைந்துள்ளனர். இவைகளில் சில, ஆங்கில வழிக்கல்விப் பள்ளிகள், தமிழ்க் குழந்தைகளைத் தமிழில் பேசுவதற்குத் தடைபோடுகின்ற இழிதகைமையையும் காண்கின்றோம். இதற்காக மகிழ்ந்து அந்நிறுவனங்களைத் தேடிச் சென்று பெரும் பொருட்செலவில் தங்கள் குழந்தைகளைச் சேர்க்கின்ற பெற்றோர்களைக் காணுகின்றோம். தங்கள் குழந்தைகளுக்குத் தமிழ்ச் சரியாக வராது என்று பெருமைப்படுகின்ற பேதைத்தமிழர்கள் நிறைந்த காலமிது!



கல்வி என்பது அறிவோடு தொடர்புடையது. ஆனால் இன்று வயிற்றோடு தொடர்பு படுத்தப்பட்டுவிட்டது. வருவாய் நோக்கமாகும் போது அறிவு பெறும் நோக்கம் இரண்டாந்தரமாய் விடுகின்றது. தாய் மொழியில் கற்றால் இரு நோக்கமும் நிறைவு பெறும். இதனைத் தம்மைக் கல்வியாளர்களாக முன்னிறுத்திக் கொண்டு

பெரும்பதவிகளில் இருப்பவர் ஏன் சிந்திப்பதில்லை? அறியாமையா? சுயநலமா?

தனது வரலாறு இன்னதென்று தெரியாமல் ஓர் இனம் வாழுமாயின், அவ்வினம் தனது மரபையும், பண்பாட்டையும், தாய் மொழியையும் இழந்து காலவெள்ளத்தில் கரைந்துபோய் விடும். அதேபோல் ஓர் இனம் தனது ஆன்மிக அகத்தையும் அறிவியல் புறத்தையும் தனது தாய்மொழி மூலம் அறியாமலிருந்தால் காலப்போக்கில் தாய்மொழியையும் தன்னையும் இழந்துபோகும். ஐந்நூறு ஆண்டுகளில் அழிந்து போகின்ற மொழிகளில் தமிழும் இடம் பெற்றிருக்கிறதாம். இந்த அவலம் ஏற்படுவதற்கு நாம் காரணரானால் எதிர்காலச் சந்ததியர்க்கு நாம் துரோகம் செய்தவராவோம்.

'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்பது வெறும் முழக்கமாக, ஆரவாரப் பொய்மையாக நின்று போகுமானால் சிலர் இங்ஙனம் பேசிக் கொண்டே எவ்விதச் செயலையும் செய்யாமல் இருப்பார்களானால், எவ்வித விளைவை நாம் எதிர்கொள்வோம்? அதனை விளக்க வேண்டுவதில்லை. எனவே அப்படிப்பட்ட விளைவு ஏற்படக்கூடாது என்பதற்காகவே இம்மாநாடு நடத்தப் பெறுகின்றது. இத்தகு சிந்தனைக்கு அடித்தளமிட்ட பெரு மக்களை தமிழர்கள் போற்றக் கடமைப்பட்டவர்கள்.

இன்றைய சூழலில் சமுதாயத்தின் பல தளங்களில் தமிழை நிலைநிறுத்துவதற்கு இருவழிகள்தான் உள்ளன. அவை 1. தமிழ்,

தமிழரின் ஆன்மிக செல்வத்தை இல்லங்கள்தோறும், திருக்கோயில்கள் தோறும் அள்ளித்தரும் அரிய இடத்தைப் பெறவேண்டும். தமிழரின் அனைத்துச் சடங்குகளிலும் வாழ்வியல் மொழியாக அது உருவாக வேண்டும். தமிழரின் இல்லங்கள் தோறும் திருமுறைகளும், நாலாயிரமும் இடம்பெற வேண்டும். தமிழ்க் குழந்தைகள் தங்கள் சமய உண்மைகளைத் தமிழிலேயே உணர்ந்து கற்க வேண்டும். 2. கல்வி நிலையங்கள் அனைத்தும், எல்லாத் துறை சார்ந்த பாடங்களையும் தமிழ் மொழியிலேயே கற்பிக்க வேண்டும் என்னும் இவ்விரு வழிகளே ஆம். ஆனால் இது நடைபெறுமா?

"அம்மா", "அப்பா" எனத் தங்கள் குழந்தைகள் அழைப்பதையே தாழ்வாகக கருதும் பெற்றோர்கள் தமிழ்ப் பெற்றோர்களே! பல நூற்றாண்டுகளுக்கு முன் இங்கு வந்து குடியேறிய வேற்று மொழியினர் இன்னும் தங்கள் தாய்மொழியை மறவாமல் போற்றி வருவதைக் காணுகின்றோம். "இலண்டன் விமான நிலையத்தில் சந்தித்துக் கொள்ளுகின்ற இரண்டு மலையாளிகள் தம் தாய்மொழியில் உரையாடுகின்றார்கள். ஆனால் தமிழ்நாட்டில் தென்னந்தோப்பில் பொழுதைக் கழிக்கின்ற இரண்டு தமிழர்கள் ஆங்கிலத்தில் உரையாடுகின்றனர்" எனப்பேராசிரியர் மு.வ. அவர்கள் பல ஆண்டுகளுக்கு முன்னால் எழுதினார். ஆனால் இன்று, அதைவிடக் கீழான நிலையில் தமிழ் பாதி ஆங்கிலம் பாதியாகப் பேசுகின்ற அவலத்தைக் காணுகின்றோம்.

வெறும் பிரச்சாரத்தினாலோ, எழுதி அறிவுறுத்துவதன் மூலமோ சமூகம் முழுமையையும் திருத்திவிட முடியாது. தமிழை நடைமுறை வாழ்வில் பயன்படும் மொழியாக மாற்ற வேண்டும். அதற்கு மிகச் சிறந்த வழி அதனை அனைத்துத் துறைகளிலும் பாட மொழியாக மாற்ற வேண்டும். அப்பொழுது துறைகள் தோறும் சிந்திக்கும் மொழியாகப் பேசும்மொழியாகத் தமிழ்வளம் பெறும். முன்னேறிய நாடுகள் அனைத்திலும் அவரவர்கள் தாய்மொழியே கற்பிக்கும் மொழியாக இருக்கையில், தமிழன் மட்டும் ஏன் அன்னிய மொழிகளின் அடிமையாக இருக்கின்றான்? இதற்குப் பாரதி மொழியில் கூறவேண்டுமானால், "அச்சமும், பேடிமையும், அடிமைச் சிறுமதியும்" தான் காரணம்.

**அருந்திறல் வல்லார் ஆய்ந்த தமிழ்**
என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது.
வெளியீடு : தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை அறிவியல் தமிழ்க் கல்லூரி பேரூர்.

# செலுலாய்ட் தெய்வங்கள்

– கவிக்கோ அப்துல் ரகுமான்

இன்றைக்கும் உண்டு
அவதாரங்கள்.

ஒப்பனை யுகத்திற்கேற்ற
அரிதார அவதாரங்கள்.

ரசனைக்கேற்பப்
பக்தர்கள் பொறுக்கி எடுக்க
தினுசு தினுசான
தெயவங்கள்;
செலுலாய்ட் தெய்வங்கள்

வர்ண சுவரொட்டிகளில்
தர்ம தரிசனம்;
'கட்', அவுட்'டுகளில்
கட்டாய விஸ்வரூபங்கள்

இது பக்தி யுகம்.

வீடுகளை இடித்து
வயல்களை அழித்து
ஊரெல்லாம்
ஆலய உற்பத்தி.

பட்டி தொட்டி எங்கும்
பஜனை மடங்கள்.

தன்னை மறந்து
தன்னைத் துறந்து
சாமியாடும்
பக்தர்கள் திருக்கூட்டம்.

எங்கும்
பக்திப் பரவச வெள்ளம்
சந்திர சூரியர்களை
அடித்துச் செல்லும் வெள்ளம்.

வீடுகளில்
அடுப்பெரியாவிட்டாலும்
ஆலயங்களில்
திரிகாலப் பூசை

அர்ச்சனைச் சீட்டுக்கு
முண்டி அடிக்கும்
சேவார்த்திகள்
இருளில்
திருவிளையாடல்கள்.



நிழல் துஷ்ட நிக்கிரக
நிழல் சிஷ்டபரிபாலனங்கள்.

தரிசனத்தில்
ஜன்ம சாபல்யமடைந்த பக்தர்களின்
ஆனந்த பரவசம்
ஆராதனை
அபிஷேகம்.

தெய்வம் வாங்கும்
பிரம்படிக்குத்
தாம் துடித்து,
தெய்வம் பெற்ற
முத்தத்திற்குத்
தாம் புளகித்து
இரண்டரை மணி நேர
இரவல் வாழ்க்கை.

தெருவெங்கும்
திருத்தொண்டர் புராணங்கள்.

கணவனின் படுக்கையில்
இஷ்ட தெய்வத்தைப் பூசிக்கும்
மீராக்கள்.

அழுதபடிவரும் குழந்தையைப்
பக்திப்பரவத்தில்
சேற்றோடு சேர்த்து மிதிக்கும்
கோரக் கும்பர்கள்.

பழைய தெய்வங்கள்
புழுங்கிச் சாகப்
புதிய தெயவங்களுக்குக்
கும்பமேளாக்கள்.

'மார்க்கெட்டு'க் கேற்ப
மவுசு
மகிமை.

இதோ!
எல்லாக் கதவுகளையும்
அடைத்து
இருளில் தொடங்குகிறது
பூசை.

காற்றில் ஒரு கதவு
கொஞ்சம் திறக்க
வெளியிலிருந்து பாயும்
வெளிச்சம்.

உடனே
சேவார்த்திகள் கத்துகிறார்கள்:

கதவை மூடு
வெளிச்சம் வேண்டாம்.



# அடிக் கரும்பு

நம்முடைய அன்றாட வாழ்க்கையிலே நாம் பலரைச் சந்திக்கின்றோம். சிலரைப் பார்த்தவுடனேயே நமக்குப் பிடித்து விடுகின்றது. வேறு சிலரைப் பார்த்தால், ஏதோவொரு காரணந் தெரியாத அபாய அறிவிப்புமணி நம்முடைய மூளையிலே ஒலிக்கும். இருந்தாலும், காலம், பொருள், இடம், ஏவல் என்பன கருதி, அவர்களுடன் பேசுவோம், பழகுவோம். நமக்குப் பிடித்தவர்களிலேயும் சிலருடன் பழகுவோம், சிலருடன் நெருங்கிப் பழகுவோம், சிலருடன் மிகவும் நெருங்கிப் பழகுவோம். இவையெதற்கும் காரணம் புரியாது. ஏதோவொரு மதிப்பீட்டை நம்முடைய மனம் நம்மையறியாதே செய்து விடுகிறது.

அப்படிப் பழகிய, பழகும் நண்பர்களிலேயும், சிலருடைய நட்பு மாதக்கணக்கில் முடிந்துவிடும். சிலருடைய நட்பு வருடக் கணக்கில் முடிந்துவிடும். ஓரிரு நட்பு வாழ்க்கை முழுவதும் தொடரும். அவர்கள் தான் நம்முடைய 'நல்ல' நண்பர்கள். அவர்களுடைய நட்பு, வளர்பிறைபோல நாளும் வளர்ந்து வரும். இதையே 'நிறைநீர நீரவர் கேண்மை' என்று வள்ளுவரும் எழுதியுள்ளார். நாலடியாரும்,

'பெரியவர் கேண்மை பிறைபோல நாளும்

வரிசை வரிசையா நந்தும்.....' என்கிறது.

அந்த நல்ல நட்பானது 'உடுக்கை இழந்தவன் கைபோல' என்றும் நம் இடுக்கண் களைய வரும். பல நீதி நூல்களும் நல்ல நட்பைப் பற்றியே நிறையப் பேசுகின்றன.

நல்ல நட்பு எப்படிப்பட்டது? ஒரு நல்ல புத்தகத்தை நாம் படிப்போமானால், அது படிக்கப் படிக்க நமக்கு இன்பத்தையே தரும். படித்துவிட்டுக் கீழே வைப்பதற்கு மனம்வராது. அதுபோலவே பண்புடையவர்களுடைய நட்பு பழகப் பழக மிகவும் இனிமையாத் தொடர்ந்து இருக்கும். விடுவதற்கு மனம் ஒவ்வாது.

இதையே வள்ளுவரும்,

நவில்தொறும் நூல்நயம் போலும்

பயில்தொறும்

பண்புடை யாளர் தொடர்பு - குறள்: 793 என்பர்.

கரும்பைச் சுவைத்தவர்களுக்குத் தான் அதன் சுவை தெரியும். அடிக் கரும்பு மிகவும் இனிக்கும். நுனிக்கரும்போ, முற்றாத காரணத்தால், அடிக்கரும்பைப் போல அவ்வளவு இனிக்காது. எனவே கரும்பை உண்ணும் போது நுனியிலிருந்து அடிநோக்கிச் சுவைத்தால், போகப் போகச் சுவை அதிகரித்துக்கொண்டு போகும். மாறாக, அடிக்கரும்பிலிருந்து மேல் நோக்கிச் சுவைத்தால், போகப்போக இனிமை குறையும். இந்த இயற்கையுடன் இணைந்த உதாரணத்தை நட்புடன் இணைத்துள்ளார் ஒரு புலவர். நட்பும், அது நல்ல நட்பாக இருந்தால், போகப் போக மிகவும் சுகமாக இருக்கும். ஆனால் அந்த நட்பு நல்லாருடைய நட்பு அல்லவென்றால், நாளாக நாளாக அது கசக்க ஆரம்பிக்கும் என்று பாடுகிறார் அவர். பெயர் தெரியாத அந்தப் புலவரின் பாடல் இது.

கனைகடல் தண்சேர்ப்பக் கற்றறிந்தோர் கேண்மை
நுனியின் கரும்புதின் றற்றே நுனிநீக்கித்
தூரில்தின் றன்ன தகைத்தரோ பண்பிலா
ஈர மிலாளர் தொடர்பு

- நாலடியார்

கனைகடல் ஆரவாரிக்குங் கடல், தூர் அடிப்பாகம், ஈரம் அன்பு

ஆரவாரிக்கின்ற கடலின் தலைவனே! படித்தவர்களுடன், பண்புள்ளவர்களுடன் ஏற்படும் நட்பு நுனியிலிருந்து கரும்பு தின்னப்புகுவதை ஒக்கும். போகப்போக இனிக்கும். பண்பற்றவர்கள், அன்பற்றவர்கள் நட்போ அடிக்கரும்பிலிருந்து நுனிநோக்கி உண்பதை ஒக்கும். போகப்போக அந்த நட்புக் கசந்துகோண்டே போகும்.

நல்ல நட்பை நாம் பெறுவதோடு மற்றவர்களுக்கும் நாம் நல்ல நண்பராக இருப்போமே!

**AYNGARAN INTERNATIONAL**
**PROUDLY PRESENTS**

FOR FURTHER DETAILS
08712 244 007











JOIN US ON YouTube www.youtube.com/ayngaran www.facebook.com/ayngaran visit us: www.ayngaran.com

# ஆழ்ந்த இரங்கல்



வாணி புட்ஸ் நிறுவனத்தில்

## குட்டி அண்ணா

என்று அழைக்கப்பட்ட

திரு **சிவப்பிரகாசம் கணேசமூர்த்தி**

அவர்கள் 02,06,2015 அன்று இயற்கை எய்தினார்,

இவரின் குடும்பத்தாருக்கும், உறவினருக்கும், நண்பர்களுக்கும் தமிழர் தகவலின் ஆழ்ந்த அனுதாபங்கள்


ஆடை ஆபரணம் வாங்க
ஆசை பூர்த்தியாக
நீங்கள் என்றும்
நாடவேண்டிய ஓரே இடம்

Jk Gold House & Fashion House

314 - 316 London Road
Croydon, Surrey CRO 2TJ
Tel : 020 8684 4577 Fax : 022 8684 4677



சோதிட சேவை

உங்கள் ஜாதகக் குறிப்புகளைத் துல்லியமாக கணிப்பிட்டு பலாபலன்களை அறிந்து கொள்வதற்கும்



கைரேகை
ஆருட சாஸ்திரம்
திருமணப் பொருத்தம்
திருமண சேவை
தொழில் கல்வி விருத்தி
போன்றவற்றுக்கு எம்மை நாடி
நீங்கள் பயன் பெறலாம்

கவிஞர் க. சிவசுப்பிரமணியம்,

No.7. Victoriya Close, Hayes-Middx, UB3, 2 PW - London, U.K.
020 8573 3944
07460 979135, 0785 3414003


Best Food
364 - 366, Bath Road
Hounslow Middlesex TW4 7HT
Tel : 020 8577 6002
Fax : 020 8570 2323
எங்கள் வியாபார நிலையத்தில் ஒவ்வொருமாதமும்
அதிரடி மலிவு விற்பனையாக
பல பொருட்களை மக்களுக்கு விற்பனை செய்கிறோம்.
ஒவ்வொரு மாதமும் எங்கள் கிளைகளுக்குச் சென்று மலிவு விலை
பொருட்களை பெற்றுக்கொண்டு கணிசமான பணத்தை
சேமியுங்கள்



இலண்டனில் தரமான தங்கத்திற்கு
PATHMINI
JEWELLERS
22ct GOLD
892 London Road
Thornton Heath
Surrey CR7 7PB
Tel : 020 8665 1111
Fax : 020 8664 8999




லூசியத்தில் முதலாவது
தமிழ்க்கடை
கற்பகம்
தங்கள் சேவையை
விரிவாக்கியுள்ளார்கள்
KATPAGAM
36, Loampit Hill Lewisham
London SE 13 7SW
Tel : 020 8694 8810
உடன் காய்கறிகள்
பழவகைகள், இறைச்சி,
தமிழ் ஆடியோ, வீடியோ
தமிழ்படங்கள் அனைத்தும்
ஒரே இடத்தில்




எவரஸ்ட்
24 Loampit Hill
Lewisham SE13 7SW
Tel : 020 8691 2233
அசத்தலான
அசைவ சுவைக்கு
Breakfast Lunch Dinner




Anthoorium
World of Designs
Jewellery & Textiles
102, B Burlington Road
New Malden,]
Surrey KT3 4NT
Tel : 020 8942 8001
Fax : 020 8942 8007
Web : www.anthoorium.co.uk
Email : sales@anthoorium.co.uk



# Shastra Cards




World class designer invitations
in affordable prices at
www.shastracards.com



#71, 2nd Floor, Dr. Radhakrishnan Salai, Mylapore, Chennai - 600 004. INDIA
Ph : 91 44 4217 2200 / 91 76 333 222 / 91 76 322 444 info@shastracards.com




Athavan TV
24 Hour Tamil Channel
Drama I Movies I Music I News I Sports I Live Events I Religion I Life Style
Free Channel
Satellite: (Eurobird 9a)
Freq: 11843
Vertical Symbol Rate: 27500
FEC – ¾
நம்ம நட்சத்திரங்களின் அணிவகுப்பு
Monday to Friday 8.30 PM
Sunday 9.00 PM
Saturday 8.00 PM
Monday to Friday 6.00 PM
Monday to Friday 8.00 PM
Monday to Friday 6.30 PM
Daily 2.00 PM
Latest Movies
Sunday 11.00 AM
Monday to Friday 5.00 PM
NEWS UPDATE
BREAKING NEWS
News That's Making News!
8AM
1PM
7PM
விளம்பர தொடர்புகளுக்கு
UNITED KINGDOM 0203 318 2004
FRANCE 097 518 0123
ITALY 0247 921 666
GERMANY 0305 6837 0039
SWITZERLAND 0435 082 375
SWEDAN 085 250 0208
WWW.ATHAVAN.TV


Hotel Westeern
Hotel Westeern (Pvt) Ltd
35, Frankfurt Place
Bambalapitiya
Colombo 4, Sri Lanka
Email : infor@hotelwesteern .com
Web : www.hotelwesteern.com
Approved by the Ceylon Tourist Board
EELAM SHOP
399 Lewisham High Street
Lewisham
London SE13 6NZ
TeL : 020 8690 6545


செல்வராஜா
கோல்டு ஹவுஸ் & டெக்ஸ்டைல்ஸ்
கோடைகால விடுமுறையை முன்னிட்டு புடவைகள் நகைகள்
அனைத்தும் நம்ப முடியாத விலைக்கழிவில்
£1000 மேல் புடவை கொள்வனவு செய்பவர்களுக்கு
£200 பெறுமதியான Gift Voucher
இலவசம்
£2000 மேல் நகைகள் கொள்வனவு செய்பவர்களுக்கு
£100 பெறுமதியான Gift Voucher
FREE
புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள
சீட்டுத் திட்டத்தில் இணைந்து
நீங்களும் ஒரு அதிஸ்டசாலி
ஆகுங்கள்.
Selvaraja Gold House & Textile
Exclusive Designer Jewellery & Sarees
162b, Mitcham Road London SW17 9NJ
Tel : 020 8767 3795 | 07825 005 269


Ilford பகுதியில் புதிய பல்பொருள் அங்காடி
SRI STORE
இது காலமும் SRI FOOD & WINE
என்ற பெயரில் இயங்கிய எமது கடை
புதிய பெயரில் தொடர்ந்து தங்கள் சேவைக்காக
396-400 Ilford Lane
Town Centre Ilford, IG1 2NB
Tel : 020 8553 7737


லூசியத்தில்
தரமான
நகைக்கடை
Thinesh
Jewellers & Textiles
276, Lewisham High Street
Lewisham London SE 13, 6JZ
Tel : 020 8613 9569 www.thinesh-jt.com


90 years of silk heritage
RmKV
Wedding Silks
handcrafted
Silks of India
panagal park chennai
brooke bond rd coimbatore
vannarpettai tirunelveli
toll free no 1800 425 3105
(applicable within
India only from 10am to 9pm)
sms Bridal7 to 53636
email silks@rmkv.com
www.facebook.com/RmkvSilks
purchase online at www.rmkv.com
Georgette 'ghagra-odhni' sarees with embroidered patterns and subtle brocades.

# லண்டனில் அதிக
# காய்கறி வகைகளை
# இறக்குமதி செய்து
# விற்பனை செய்பவர்கள்






145



Lycamobile
Call the world for less
WIN £10,000 CASH !
THE 2015 VIDEO COMPETITION
Make a video promoting our 'No Roaming Charges' offer and you could win £10,000 cash!
More info and t&c at www.lycamobile.co.uk/video2015
No Roaming Charges
when you use your Lycamobile abroad in 17 destinations
Australia
Austria
Belgium
Denmark
France
Germany
Ireland
Italy
Netherlands
Norway
Poland
Portugal
Romania
Spain
Sweden
Switzerland
USA
Top-up your SIM online or where you see the following signs:
TESCO
Sainsbury's
ASDA
WHSmith
Martin McColl
Customers may not be able to use Electronic Top-Up at all locations where the top-up logo appears
Special International rates for UK Plans customers offer ('the offer') is valid for calls from the UK to standard international landline and mobile numbers only and for customers with UK PLAN 7.5 or more. (Except UK plan 5). Lycamobile reserves the right to replace or amend the offer or these Terms & Conditions or to withdraw the offer at any time on reasonable notice. These rates are valid until 31-05-2015. Lycamobile UK Plan ("the offer") inclusive allowances are for calls and texts from the UK to standard UK landline (starting 01,02 or 03) and other UK mobile numbers, and for mobile internet usage in the UK. Other usage will be charged at standard rates. Allowances are valid for 30 days from the date of purchase. 4G availability is subject to handset model and location. The offer is valid from 01.01.2015. Customers must buy a bundle or top-up for no roaming costs on calls and texts. Customers must buy a specific data bundle for no roaming costs on data – full details at lycamobile.co.uk. Free Lycamobile to Lycamobile calls when roaming are restricted to a total of 100 minutes (applicable to both inbound and outbound calls). No roaming costs are only available for a continuous period of 59 days.
Lyca mobile
Call the world for less